# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 27 இதழ் - 7 ஜுலை 2014

தனிப்பிரதி
ரூ.10/-



**சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று ;**
**உண்டானதொன்றும் அவராலேயல்லாமல்**
**உண்டாகவில்லை**

( யோவான் 1 : 3 )

# நமது ஆசிரியர்
# சகோ. ராஜநாயகம் அவர்கள் பங்குபெறும்
# சிறப்புக் கூட்டங்கள்

**நற்செய்திக் கூட்டம்**

நாள் : 27.7.2014 – ஞாயிறு

நேரம் : மாலை 6:30 மணி

இடம் : அயோத்தியா பட்டணம், சேலம்.

தொடர்புக்கு

சகோ. டேவிட்
ஊழியர்
97150 47581

**சிறப்பு வேதபாட வகுப்புகள்**

நாள் : 29.7.2014 – செவ்வாய்
(அரசு விடுமுறை நாள்)

நேரம் : காலை 9.00 மணி
மதியம் 1.00 மணி

இடம் : YMCA வளாகம், திருப்பத்தூர்.

தொடர்புக்கு

சகோ. சம்மா
ஊழியர்
999403 57811

## ஆசானின் அறிவுரையிலே ...


ஆசிரியர் உரை .................... 1

ஏன் விசுவாசம் .................... 9

பெண்கள் பகுதி .................... 14

வாலிபர் பகுதி .................... 17

சிறுவர் பகுதி .................... 20

விவாகமும், விவாகரத்தும் ..... 22

இயேசுவும், சிலுவையும் ........ 26

வசன ரீதியான ....................29

தேவன் ஏன் பாடுகளை ............ 31


- ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 27 JULY - 2014 Issue - 7**


ஆசிரியர் உரை

# தேவனுடைய உபதேசத்தால் அலங்கரித்தல்

அலங்கரித்தல் மற்றும் அலங்கரம் போன்றவை ஒரு காலத்தில் அரிதான ஒன்றாக மனுக்குலத்தால் பார்க்கப்பட்டு, அவ்வப்போது பயன் படுத்தப்பட்டு வந்துள்ளது. ஆம், அவசியமான சந்தர்ப்பங்களில் முற்றிலும் தேவையானவர்கள் மாத்திரம் இவ்வார்த்தைகளோடு சம்பந்தமுடையவர் களாயிருந்தார்கள். அதாவது, திருமண நாட்களில் மணப்பெண்கள் சீவி முடிந்து சிங்காரிக்கப்பட்டு மண இடத்திற்கு அழைத்து வரப்படுவார்கள். இது தவிர, அந்நாட்களில் நாடக மேடை களில் ஏறி மக்கள் முன் காட்சி தர வேண்டிய நிலையிலிருந்தவர்கள், தாங்கள் எடுப்பாகத் தெரிய வேண்டுமென்பதற்காக அரிதாரம் பூசிக் கொள்வார்கள். இது தான் அன்றைய நாட்களின் அலங்கரித்தலும், அலங்காரமும்.

ஆனால், நாம் வாழக்கூடிய இந்தக் காலம் இதற்கு நேர் எதிரானது. குறிப்பிட்டவர்களுக்கு குறிப்பிட்ட நாட்களில் என்றிருந்த நிலை அடியோடு மாறி, எல்லோருக்கும் எல்லா நாட்களிலும் என்ற நிலை ஏறத்தாழ வந்து விட்டது. அத்தோடு பெண்களுக்குத் தான் என்றிருந்த நிலையும் மாறி, ஆண் சமுதாயமும் இம்மோகத்தால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அலங் கரித்தலுக்கும், அலங்காரத்திற்கும் அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் தரப் படுகிறது. வருமானத்தின் கணிசமான பகுதியும், போனால் கிடைக்காத

பொன்னான நேரமும் இதற்காக விரயமாக்கப்படுகிறது. சரியாகக் கணக்கிட்டால், ஒவ்வொரு குடும்பத்தாலும் மளிகைச்சாமான் கடைக்கு இணையாகவும், சொல்லப்போனால் அதிகமாகவும் அலங்காரப் பொருள் விற்பனை அங்காடிகளுக்கும், புற்றீசல் போல் புறப்பட்டுவிட்ட அழகு நிலையங் களுக்கும் செலவிடப்படுகிறது என்கிற அதிர்ச்சி தரும் உண்மையை அறிந்து கொள்ள முடியும். என்ன செய்ய, காலத்தின் கோலம் என்கிறீர்களா? இல்லை யில்லை. இது காலத்தின் கேவலம்! சரிதானே?.

ஒருவேளை உலகத்தின் போக்கும், உலகத்தாருடைய நடை முறையும் இவ்விதமாக இருந்தாலும், தேவனை நேசிப்பவர்களுக்கு வேதாகமம் வேறொரு அலங்கரிப்பு பற்றிப் பேசுவதை நாம் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த அலங்கரிப்பு பற்றி பவுலடியார் தான் விசுவாசத்தில் பெற்ற உத்த குமாரர்களில் ஒருவனாகிய தீத்துவுக்கு எழுதின நிருபத்தில் இவ்விதம் குறிப்பிடுகிறார். " ..... நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரிக்கத்தக்கதாக" என்று (தீத்து 2:9).

சரி, இந்த வசனப்பகுதியோடு மேலும் நம்மை சம்பந்தப்படுத்துவதற்கு முன்பாக, நமது வழக்கத்தின்படியாக இதன் பின்னணி குறித்துக் கொஞ்சம் பார்த்து விடுவோம்.

" கிரேத்தா " என்பது மத்திய தரைக்கடலில் இருந்த ஒரு தீவு. சுமார் 250 கி.மீ. நீளமும், 50 கி.மீ அகலமும் கொண்டது. இத்தீவைச் சேர்ந்தவர்கள் அடிப்படையில் நற்குணங்களைக் கொண்டவர்களாக இல்லை. " ஓயாப் பொய்யர்களாகவும், துஷ்ட மிருகங்களாகவும், பெருவயிற்றுச் சோம்பேறி களாகவும் " இருந்துள்ளார்கள் (தீத்து. 2:11). ஆயினும், பக்தியுள்ளவர்களும் அங்கு இல்லாமலில்லை. எப்படியெனில், கிறிஸ்து உயிர்த்தெழுந்ததற்குப் பிறகு வந்த பெந்தெகொஸ்தே நாளில், அப்பண்டிகைக்காகக் கூடி வந்தவர் களில் கிரேத்தாத் தீவாரும் இருந்துள்ளார்கள் (அப். 2:9). கிறிஸ்துவின் சபையானது ஆரம்பமான அந்த மகாநாளில், பேதுரு செய்த அப்பிரசங்கத் தைக் கேட்டவர்களில் அவர்களும் அடக்கம். அன்றைக்குக் கீழ்ப்படிந்த 3000 பேரில் (அப். 2:41) கிரேத்தா தீவாரும் இருந்திருக்க வாய்ப்புண்டு. அப்படிக் கீழ்ப்படிந்த புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களால் தான் குணக்கேடு கொண்ட அத்தீவில் சபையானது பட்டணங்களிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டு மென்று என்று நம்பப்படுகிறது.

காலப்போக்கில், இத்தீவின் மற்ற பட்டணங்களிலும் சபையானது ஆரம்பமாகியிருக்க வேண்டுமென்றும் தெரிகிறது. எப்படியெனில், " நீ குறை வாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்குக்

கட்டளையிட்டபடியே **பட்டணங்கள் தோறும்** மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும் உன்னைக் கிரேத்தா தீவிலே விட்டு வந்தேன் என்று பவுலடியார் குறிப்பிட்டுள்ளார். பவுலடியாரைப் பொறுத்தளவில் தன்னுடைய முதலாவது ரோம சிறைவாசத்திற்குப் பிறகு இத்தீவிற்குச் சென்றிருக்கலாம் என்று நம்ப இடமுண்டு. ஏனெனில், எக்கச்சக்கமான சவால்களோடு மேற்கொண்ட ரோமாபுரி பயணத்தின்போது இங்கு சென்றிருக்க வாய்ப்பில்லை " (அப். 27:7,13).

தீத்து கிரேத்தா தீவில் விடப்பட்டதற்கு மூன்று பிரதான காரணங்கள் இருந்தது. (1) ஆவிக்குரிய சிந்தை கொண்ட தலைகளை அடையாளம் காண்பது (1:5) (2) ஆரோக்கியமான உபதேசத்தில் கவனம் செலுத்துவது (2:1) (3) பக்தி வாழ்க்கையை வலியுறுத்துவது (2:7-10). நம்முடைய தலைப்பிற்கான பகுதி இந்த மூன்றாம் பிரிவில் தான் இடம் பெற்றுள்ளது.

மெய் பக்தி வாழ்க்கை என்பது அறவே அற்றுப்போன ஒரு கால கட்டத்தில் அல்லது போலி பக்தி முறை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற நாட்களில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். கிறிஸ்தவமும் இதற்கு விதிவிலக்காக இல்லையென்பது விந்தையிலும் விந்தை என்பதை விட வேதனையிலும் வேதனை. எதார்த்த நிலை இப்படியாக இருந்தாலும் வேதாகமம் மெய்பக்தி வாழ்க்கையைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே வருகிறது. கிரேத்தா தீவார் போன்றவர்கள் கூட பக்தி வாழ்க்கையில் மேம்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்பது தேவனுடைய தேர்ந்த எதிர்பார்ப்பாக இருந்துள்ளது. ஆகவே தான், " அவர்கள் தேவனுடைய உபதேசத்தால் தங்களை எல்லாவற்றிலும் அலங்கரித்துக்கொள்ள வேண்டு மென்று " ஆவியானவர் அறிவுறுத்தியுள்ளார். இப்படி ஆவிக்குரிய அலங் காரத்தை வலியுறுத்துகிற தேவன், இந்த அலங்காரத்தை கிரேத்தா தீவு சபை யார் எங்ஙனம் மேற்கொள்ள முடியும் என்பதற்கான வழிமுறைகளையும் இப்பகுதியில் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆகையால், அருமையானவர்களே, தீத்து 2:7-10 வசனங்கள் அடங்கிய இவ்வேத பகுதியை நாம் தியானித்து, ஆவிக்குரிய அலங்காரத்திற்கு அவர்களுக்குக் காட்டப்பட்ட வழிமுறை இன்னதென்று புரிந்து கொண்டு, நம்முடைய பக்தி வாழ்க்கைக்கான அலங்கார அம்சங்களைப் பெற்றுக்கொள்ள இப்போது முயற்சிப்போம்.

## I ஆவிக்குரிய அலங்காரத்திற்கு " ஒன்றை அப்படியே பின்பற்றுவது " அவசியம்

கிரேத்தா தீவாருக்குத் தேவையான ஆவிக்குரிய அலங்காரத்திற்கு அவசியமானவைகளில் முதலாவதாக வருவது ஒன்றை அப்படியே பின்பற்றுவது பொதுவாக, அலங்காரம் என்பது குறையாக இருக்கின்ற

ஒன்றை நிறைவாகக் காட்டுவது அல்லது இல்லாத ஒன்றை கிட்டத்தட்ட இருப்பது போல் காட்டுவது. இப்படிச் செய்வதற்கு " ஒரு மாதிரி " அவசியம். மாதிரி இருந்தால் தான் ஒன்றை அதன்படியே செய்ய முடியும். கிரேத்தா தீவார் தங்களை இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தால் எல்லாவற்றிலும் அலங்கரிப்பதற்கு அவர்களுக்கு மாதிரி தேவைப்பட்டதால், விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீத்துவையே பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு மாதிரியாகக் கொடுக்கிறார். " நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியை களுக்கு மாதிரியாகக் காண்பி " என்று (தீத்து. 2:7). இவ்வசனத்தின்படி கிறிஸ்துவின் உபதேசத்தால் ஒருவன் தன்னை அலங்கரித்துக்கொள்வதற்கு " நற்கிரியைகள் " அவசியம் என தெரிகிறது. கிரேத்தா தீவாரிடத்தில் துர்க் கிரியைகள் தான் அதிகம் இருந்தது. அவைகள் அவர்கள் ஆவிக்குரிய வாழ்வுக் கான அலங்கோலத்தையே கொடுத்திருக்கும். அவைகளை அவர்கள் களைந்து தங்களை நற்கிரியைகளுக்கு உட்படுத்த வேண்டியிருந்தது. அதற்கு ஒரு சிறந்த மாதிரியாக தீத்து இருக்க வேண்டுமென்று பவுலாலே பணிக்கப்பட்டார்.

அருமையானவர்களே, நம்முடைய ஆவிக்குரிய அலங்காரத்திற்கு, கிறிஸ்துவின் உபதேசத்தால் நம்மை எல்லாவற்றிலும் அலங்கரித்துக் கொள் வதற்கு, கிரேத்தா தீவாருக்குக் காட்டப்பட்ட " தீத்து " என்ற மாதிரி போன்று வேறு பல " மாதிரிகளும் " புதிய ஏற்பாட்டில் நமக்குக் காட்டப்பட்டிருக்கிறது. அந்த மாதிரிகளுக்கெல்லாம் முத்தாய்ப்பாக இருப்பது நற்கிரியைகளை மாத்திரம் நடப்பித்த நம்முடைய இரட்சகர் இயேசுவின் மாதிரி. எப்படியெனில், " தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராகவும் சுற்றித் திரிந்தார் " என்று வாசிக்கி றோம். (அப். 10:38). நற்கிரியைகளின் மொத்த உருவம் இயேசு கிறிஸ்து தான் என்று கூரை மீது ஏறி நின்று நாம் கூப்பாடு போட்டுச் சொல்ல முடியும். நற்கிரியை களுக்கான மாதிரி தான் கிரேத்தா தீவாருக்கு அன்றைக்குத் தேவையா யிருந்தது, இன்றைக்கும் அதுதான் தேவையாயிருக்கிறது. கிறிஸ்துவின் மாதிரியை ஏற்று நடக்க வேண்டுமென்று பேதுரு அப்போஸ்தலனும் வலியுறுத்தியுள்ளார். " இதற்காக, நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார் " என்று (1 பேதுரு 2:21).

அப்படியானால், நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய உபதேசத்தால் நம்மை அலங்கரித்துக் கொள்வதற்கு கிறிஸ்துவாகிய மாதிரியும், தீத்து போன்ற மாதிரிகளும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் போது, தேவனுடைய உபதேசத்தின்படியான அலங்காரம் நம்மிடம் எப்படிப்பட்டதாயிருக்கிறது?

தேவனால் கட்டளையிடப்பட்டு, கிறிஸ்துவால் உபதேசிக்கப்பட்டு, அப்போஸ் தலர்களால் பிரசங்கிக்கப்பட்ட எல்லாவற்றையும் செய்கிறவர்களாக நாம் உண்மையாகவே உள்ளோமா? தீத்துவுக்கு எழுதின நிருபத்தில் "எல்லா வற்றிலும் அலங்கரிக்கத்தக்கதாக " என்றுள்ளதை நாம் குனிந்து கவனிக்க வேண்டும். ஏதோ, " முடிந்த வரை ", " எனக்குத் தெரிந்த வரை என்றெல்லாம் கூறி நாம் தப்பித்துவிட வழியே இல்லை ". ஒருவேளை அப்படிச் செய்வோ மானால் நம்முடைய அலங்காரம் அலங்கோலமாக மாறி விடும்.

ஆக, இந்த உண்மைகளைப் புரிந்தவர்களாக நாம் நம்முடைய பக்தி வாழ்க்கையை அமைத்துக் கொண்டு, கிறிஸ்துவின் உபதேசத்தால் நம்மை எல்லாவற்றிலும் அலங்கரித்த ஒரு வாழ்க்கையை மேற்கொள்ள நம்மை ஒப்புக்கொடுப்போம்.

## II ஆவிக்குரிய அலங்காரத்திற்கு " ஆரோக்கியமான பேச்சு " அவசியம்

கிரேத்தா தீவாருக்குத் தேவையான ஆவிக்குரிய அலங்காரத்திற்கு அவசியமானவைகளில் இரண்டாவதாக வருவது, ஆரோக்கியமான பேச்சு.

கிரேத்தா தீவாரைப் பற்றி அவர்கள் தீர்க்கதரிசிகளிலே ஒருவனே சொல்லும் போது, " ஓயாப் பொய்யர் " என்றும், " துஷ்ட மிருகங்கள் " என்றும் குறிப்பிடுகிறார். இது அவர்கள் பேச்சிலும், செயலிலும் நாணயமற்றவர்களா யிருந்தார்கள் என்பதற்குச் சரியான அத்தாட்சியாக உள்ளது. பொய்யிலே இவர்களுக்கு இணை இவர்கள் தானோ? " அடுத்து, இங்கே துஷ்ட மிருகங்கள்" என்பது ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்களை உள்ளடக்கியிருக்கிறதாகவே தெரிகிறது. அவைகளில் ஒன்று, அவர்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சிக்கிறவர்களாயிருந்திருக்க வேண்டு மென்பது. கலாத்தியருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் இது போன்ற ஒரு நிலையை நாம் காண முடியும். " நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவரி லொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் " என்று (கலா. 5:15).

கிரேத்தா தீவாருடைய பேச்சில் உண்மையும், நாணயமும், பரஸ்பர அன்பும் இல்லாதிருந்தபடியால், ஆவியானவர் தீத்துவை, இக்காரியத்திலும் முன்மாதிரியாக இருக்க வேண்டுமென்று பவுலடியார் மூலம் பணிக்கிறார். "*எதிரியானவன் உங்களைக் குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்று மில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும், குற்றம் பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக* " (தீத்து. 2:8) என்று. இங்கே " ஆரோக்கியமான வசனம் " என்பது, தேவனுடைய வார்த்தைகள் பற்றியது அல்ல. மாறாக, ஒருவரால் பேசப்படும் பேச்சு சம்பந்தப்பட்டது. அவைகள்

ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்கிறார். எதற்காக? ஒருவரை ஒருவர் கடித்துப் பட்சிக்கும் கிரேத்தா தீவார் தேவனுடைய உபதேசத்தால் தங்களை அலங்கரிக்க வேண்டுமென்பதற்காகத்தான் வேறெதற்கு?

நாம் பேசும் வார்த்தைகள் எவ்வளவு முக்கியமானவை என்பது விளங்கு கிறதா? விளங்கியாக வேண்டும் நாம் தேவனுடைய உபதேசத்தால் அலங்கரிக்கப்பட வேண்டுமானால் பிறரோடு பேசப்படும் வார்த்தைகள் கவனமுள்ளதாயிருக்க வேண்டுமென்று கொலோசெ பட்டணத்து கிறிஸ்தவர் களுக்கு இவ்விதம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. "*அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்ல வேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும், உப்பால் சாரமேறினதாயு மிருப்பதாக* " என்று (கொலோ. 4:6).

அப்படியானால், அருமையானவர்களே, பிறருடனான நம்முடைய பேச்சு எப்படிப்பட்டதாயுள்ளது? கிரேத்தா தீவார் போன்றுள்ளதா? அல்லது கிருபை பொருந்தினதாயும், உப்பால் சாரமேறினதாயுமிருக்கிறதா? சொல்லுங்கள். நம்முடைய பக்தியற்ற, தரமற்ற, முறையற்ற பேச்சால் காயப்பட்டவர்கள் எத்தனை பேர், வலியால் துடித்தவர்கள் எத்தனை பேர்? அவமானமடைந்தவர்கள் எத்தனை பேர்? நம்மை விட்டு ஒதுங்கிக் கொண்டவர்கள் எத்தனை பேர்? குடும்பத்திலிருந்து பிரிந்து நிற்பவர்கள் எத்தனை பேர்? சபையிலிருந்து விலகிப்போனவர்கள் எத்தனை பேர்? விசுவாசித்தை மறுதலித்தவர்கள் எத்தனை பேர்? சொல்லுங்கள். நாமே ஒரு இரகசியக் கணக்கெடுத்துப் பார்ப்போம், உண்மை நிலவரம் தெரியும். இக்காரியத்தில் நாம் குறைவுள்ளவர்களாகக் காணப்பட்டால் தேவன் நம்மை எப்படி ஆசீர்வதிப்பார்? இப்படிப்பட்ட பெலவீனங்களைத் துரத்தித் தூக்கி யெறியாமல் தேவனுடைய உபதேசத்தால் நாம் எப்படி நம்மை அலங்கரிக்க முடியும்? ஆத்ம பரிசோதனை செய்வோம். நம்முடைய பேச்சு நாம் யார் என்பதை வெளிப்படுத்தி விடும் என்பதை பேதுருவின் மூலம் நாம் கற்றுக் கொள்ளமுடியும். பேதுருவின் மறுதலிப்பின் போது, அங்கே நின்றவர்கள், " உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது " என்றார்கள் (மத்தேயு 26:73). ஆகையால், நாம் மிகவும் எச்சரிப்புள்ளவர்களாயிருந்து நம்முடைய பக்தி வாழ்க்கையை நடத்த வேண்டும். இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தால் நம்மை அலங்கரிப்போம்.

### III ஆவிக்குரிய அலங்காரத்திற்கு " நற்சாட்சி " அவசியம்

கிரேத்தா தீவாருக்குத் தேவையான ஆவிக்குரிய அலங்காரத்திற்கு அவசியமானவைகளில் அடுத்ததாக வருவது நற்சாட்சியான வாழ்க்கை.

தீத்து 2:9-10 ஆகிய வசனங்களைக் கவனியுங்கள். " *வேலைக்காரர் நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரிக்கத்தக்கதாக, தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருந்து எதிர்த்துப் பேசாமல், எல்லாவற்றிலும் பிரியமுண்டாக நடந்து கொள்ளவும், திருடாமலிருந்து, சகல விதத்திலும் நல்லுண்மையைக் காண்பிக்கவும் புத்தி சொல்லு*" என்றுள்ளது. இவ்வசனப்பகுதி, மேலான அதிகாரத்திற்கான ஒருவனுடைய ஆவிக்குரிய மனோபாவம் பற்றியும், அதற்குத் தன்னை ஒப்புக்கொடுப்பது பற்றியும் பேசுகிறது.

கிரேத்தா தீவாரின் பக்தி வாழ்க்கை எல்லாவற்றிலும் ஆவிக்குரிய அலங்காரத்துடன் காணப்படாமல், பல காரியங்களில் அலங்கோலத்துடன் காணப்பட்டுள்ளது. தேவன் அவருடைய பிள்ளைகள் எல்லா வகையிலும் அவருடைய சாயலில் இருக்க வேண்டுமென்று தான் எதிர்பார்க்கிறார். படைப்பின் போதே இப்பேருண்மையை அவர் வெளிப்படுத்திவிட்டார். (ஆதி. 1:26,27) ஆகவே தான், பேதுரு அப்போஸ்தலன், " உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள் " என்று (1 பேதுரு 1:15) கூறியுள்ளார். ஆனால், கிரேத்தா தீவார் " எல்லாவற்றிலும் " என்பதில் குறைவுள்ளவர்களாயிருந்தபடியால், அவர்கள் களைய வேண்டிய காரியங்கள் பவுலடியாரால் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டு, ஒவ்வொன்றாக நம் வசனப் பகுதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலான அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய மனமில்லாத ஒருவன், எல்லா அதிகாரங்களையும் கொண்ட தேவனுக்கும் கீழ்ப்படிய மாட்டான். தான் இருக்கின்ற இடத்திலே, பணிபுரிகின்ற இடத்திலே பிரியத்தையும், நல்லுண்மையையும் வெளிப்படுத்தாத ஒருவனால் எவ்வகையிலும் நற்சாட்சியுடையவனாக இருக்க முடியாது. நற்சாட்சி அற்றவன் தேவனுடைய உபதேசத்தால் தன்னை ஒரு போதும் அலங்கரிக்க முடியாது.

ஆக, ஒருவன் எல்லாவற்றிலும் ஆவிக்குரிய அலங்காரத்தோடு திகழ நற்சாட்சி முக்கியம். அப்படிப்பட்ட நற்சாட்சிக்குக் கீழ்ப்படிதல் அவசியம். கீழ்ப்படிதலுக்கு அதிகாரத்தை ஏற்றுக் கொள்வது அவசியம். அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுக்கும், அவருடைய நியமனத்துக்கும் எதிர்த்து நிற்கிறவனாகவே இருப்பான் (ரோமர் 13:2). ஆகையால் தான், ஆதி திருச்சபையில் நற்சாட்சிக்கு அதீத முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அப்போஸ்தலர்களின் வேலைப்பளுவைக் குறைக்கும்படியாய், ஏழுபேரைத் தெரிந்தெடுக்க முடிவு செய்யப்பட்ட போது, " நற்சாட்சி " ஒரு முக்கிய அங்கமாக இருந்துள்ளது. " *ஆதலால், சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்* " (அப். 6:3)

என்றுள்ளது. கிறிஸ்தவத்தில் நற்சாட்சி பட்டுப்போகுமானால், அது கிறிஸ்துவின் நாமத்திற்கும், அவருடைய உபதேசத்துக்கும் சொல்ல முடியாத பாதிப்பை ஏற்படுத்தும்.

அருமையானவர்களே, நம்முடைய நற்சாட்சி எப்படியிருக்கிறது? கிரேத்தா தீவாரிடத்தில் எதிர்பார்க்கப்பட்ட கீழ்ப்படிதலும், பிரியமும், நல்லுண்மையும் எல்லா மட்டங்களிலும் காணப்படுகிறதா? " எதிர்த்துப் பேசாத கீழ்ப்படிதல் " என்று வசனம் குறிப்பிடுவதை நாம் கவனிக்க வேண்டும். அதாவது, செய்யப்பட வேண்டுமென்று சொல்லப்படுகின்ற எல்லா வற்றையும் அப்படியே நிறைவேற்றுவது. இப்பண்பு இரட்சகர் இயேசுவிடம் காணப்பட்டது. அதினிமித்தமே, "...நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக் கிறது " என்று அவரால் முழங்க முடிந்தது (யோவான் 6:34).

அப்படியானால், நம்முடைய பக்தி வாழ்க்கையில் நம்மிடம் எதிர்த்துப் பேசாத கீழ்ப்படிதல் காணப்படுகிறதா? தேவன் ஒன்றைச் சொல்லியிருக்கும் போது, அதை நாம் அப்படியே செய்யாமலோ அல்லது மாற்றிச் செய்கிறவர் களாகவோ இருப்போமானால் நாம் தேவனை எதிர்க்கிறவர்களாகவே இருப்போம். அது ஞானஸ்நானமாக இருக்கலாம், இரட்சிப்பாக இருக்கலாம், ஆராதனையாக இருக்கலாம் அல்லது தேவ பக்திக்கான எதுவாக வேண்டு மானாலும் இருக்கலாம். தேவனுடைய வார்த்தைகளை நாம் எதிர்த்து விட்டு தேவனுடைய உபதேசங்களின் அலங்காரத்தோடு நம்முடைய பக்தி வாழ்க்கையை நாம் நடத்திவிட முடியாது. கிறிஸ்துவின் உபதேசப்படியான அலங்காரம் இல்லாத பட்சத்தில் நாம் மறுமையைச் சுதந்தரித்துக் கொள்ளவே முடியாது.

ஆகையால், நாம் ஒவ்வொருவரும் இந்த உண்மைகளைப் புரிந்து நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரிக்கத்தக்கதாக நம்மை, அவருடைய கிருபையுள்ள வசனத்திற்கு ஒப்புக்கொடுப்போமாக! ஆமென்!!

## ஜெபியுங்கள்

**எதிர்வரும் செப்டம்பர் திங்கள் 2,3,4-2014 ஆகிய தேதிகளில் ஏற்காடு மலையில் நடைபெற உள்ள ஊழியர்கள் சிறப்பு முகாமிற்காக ஜெபியுங்கள்.**

**- ஆசிரியர்.**



# ஏன் சுவிசேஷம் இரட்சிப்பதற்கு தேவபெலனாயிருக்கிறது?

**Bro. J.C. சோட்**

ஏன் ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டும்? ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டும் என்று சொல்லும் போது, அவர் இழந்து போன நிலையில் இருக்கிறார், ஆபத்தில் இருக்கிறார், அப்படிப்பட்டவர் காப்பாற்றப்பட வேண்டும். ஏனெனில், மனிதன் தன்னைத் தானே மீட்டுக் கொள்ளும் நிலையில் இல்லை. இழந்து போன நிலையில் இருப்பதை நாம் சிலருக்குச் சுட்டிக்காட்டும் போது அவர்கள் கோபப்படுகிறார்கள். ஆனால், இப்படிப்பட்ட மக்கள் தான் எல்லாரைக் காட்டிலும் மிக மோசமான நிலையில் இருக்கிறார்கள். இழந்துபோன நிலையில் இருப்பதே மோசமான நிலை தான். அதிலும் எப்படி ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதையும், இழந்து போனதை அறியாமலும், ஒத்துக் கொள்ளாமலும் இருந்தால், அப்படிப்பட்டவர்களுக்கு எப்படி உதவ முடியும்? அநேகர் இழந்துபோன நிலையில் இருந்து கொண்டு தாங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதாக நினைக்கிறார்கள். இவர்களுக்கு இரட்சிப்புக்கான உதவி தேவை, ஆனால், இப்படிப்பட்டவர்களைச் சென்றடைவது கடினம்.

மனிதன் பாவத்தில் சிக்கி இழந்துபோன நிலையில் இருந்தால், அந்த பாவத்திலிருந்து விடுபட மனிதனால் என்ன செய்ய முடியும்? நிச்சயமாகவே, மனிதனால் தன்னைத் தானே இரட்சித்துக் கொள்ள முடியாது. பாவத்திலிருக்கும் வேறு யாரும் அவனை இரட்சிக்க முடியாது. ஒருவனுடைய நற்கிரியைகள் மட்டும் அவனை இரட்சிக்காது. அப்படியென்றால், மனிதனுக்கு நம்பிக்கையே இல்லையா? இல்லையில்லை, நம்பிக்கை இருக்கிறது. நம்மில் அன்பு கூர்ந்து, நாம் தப்பித்துக் கொள்ளும் போக்கை உண்டாக்க ஒருவர் விரும்பினபடியால் நிச்சயமாகவே நம்பிக்கை இருக்கிறது.

நூற்றுக்கணக்கான ஆண்டுகள், தேவன், மனிதன் தன் பாவங்களிலிருந்து நிவர்த்தியாகும் பொருட்டு மிருக பலிகளைச் செலுத்தும்படி கட்டளையிட்டார். இந்த பலிகளால் நிரந்தரமாக மனிதனுடைய பாவங்களை எடுத்துப் போட முடியவில்லை. ஏனென்றால், மனிதனுடைய பாவங்கள் வருடந்தோறும் நினைவு கூரப்பட்டது (எபி. 10:1-4). எனவே, தேவன் இந்த உலகத்தின் பாவத்திற்காக ஒரே தரம் மரிக்கும்படி தம்முடைய ஒரே பேறான குமாரனை சிலுவையில் பலியாகும்படி அனுப்பிக் கொடுத்தார் (யோவான் 3:16; ரோமர் 5:8). எபிரெய ஆசிரியர் கிறிஸ்துவைப் பற்றி இப்படியாகச் சொல்கிறார், " *இவரோ பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி,*

*என்றென்றைக்கும் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து, இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாத படியாக்கிப் போடும் வரைக்கும் காத்துக் கொண்டிருக்கிறார். ஏனெனில், பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்"* (எபி. 10:12-14).

மனிதனுடைய பாவங்களுக்காகக் கிறிஸ்து சிலுவையில் மரித்த போது, குறிப்பாக, அவர் தேவனுடைய குமாரன், தேவனிடத்திலிருந்து வந்தவர், மானிட இரட்சகர் என்பதை நிச்சயப்படுத்த, அவருடைய அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, மானிடர் எல்லோருக்கும் அது நற்செய்தி யாகி விட்டது. மனிதன் இரட்சிக்கப்பட முடியும், நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதால் இது நற்செய்தியாயிருக் கிறது. இது தான் சுவிசேஷம் எனப்படுகிறது. அதாவது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் தான் நற்செய்தி எனப் பொருள்படும் சுவிசேஷமா யிருக்கிறது. இது இன்றும் நற்செய்தியா கத்தான் இருக்கிறது. மனிதன் இதை விசுவாசித்து தன்னுடைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும்படி இந்த நற்செய்தி அவனுக்கு தேவனால் அளிக்கப்பட்டிருக்கிறது.

பவுல் இப்படியாக எழுதினார், *"ஆதலால், கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாத வர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லா விட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப் பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக் கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே"* (ரோமர் 10:13-15). மறுபடியும் பவுல் சொல்லும்போது, *"இப்படியிருக்க சகோதரரே, நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்றிருக் கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழா யிருந்தார்கள், எல்லாரும் சமுத்தி ரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள். எல்லா ரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞான போஜனத்தைப் புசித்தார்கள் எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர் களோடே கூடச் சென்ற ஞானக் கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே"* (I கொரி. 10:1-4).

ஆனால், உண்மைகள் எப்படி ஒருவரை இரட்சிக்க முடியும்? பிரசங்கம் எப்படி அவர்களை இரட்சிக்கும்? அல்லது அவைகளை விசுவாசிப்பதன் மூலமாக எப்படி அவைகள் ஒருவனை இரட்சிக்கும்? இதைப் புரிந்து கொள்ள வசனங்கள் என்ன சொல்கிறது என்று பார்ப்போம். கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, அவர் பரலோகத்திலிருக்கிற பிதா வினிடத்திற்கு திரும்பு வதற்கு சற்று நேரத்திற்கு முன்பு அவர் அப்போஸ் தலர்களைப் பார்த்து இப்படியாகச் சொன்னார். *"பின்பு, அவர் அவர்களை*

*நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய்; சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங் கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான்* " என்று (மாற்கு 16:15,16). மத்தேயு நற்செய்தியாளர் நம்முடைய கர்த்தரின் வார்த்தைகளை இப்படியாகப் பதிவு செய்திருக்கிறார். "*ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர் களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்* " (மத்தேயு 28:19,20). லூக்கா நற்செய்தியாளர் இப்படியாக விவரிக்கிறார். எழுதியி ருக்கிறபடி, " *கிறிஸ்து பாடுபடவும் மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந் தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியதாயிருந்தது* " (லூக்கா 24:46,47).

மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய புத்தகங்களில் கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களைப் பார்த்து உலகெங்கும் போய், ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு தனி நபருக்கும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்று சொன்னார். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் போது, கர்த்தருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய நற்செய்தியை அவர்கள் அறிவிக்க வேண்டியதாயிருந்தது. அப்படியானால், வேறு எதுவும் பிரசங்கிக்கப்படவில்லையா? கர்த்தர் அப்போஸ்தலர்களிடம் வேறு எதையும் பிரசங்கிக்க கட்டளையிடவில்லையா? ஆம், அவர்கள் விசுவாசத்தையும், ஞானஸ்நானத்தையும் பற்றி பேச வேண்டியதாயிருந்தது. அதுமட்டுமல்ல, அவர்கள் விசுவாசி களுக்கு பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ் நானம் கொடுக்க வேண்டியதாயிருந்தது. ஆனால், இதற்கும் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்கும் உள்ள சம்மந்தம் என்ன? நாம் குறிப்பாக அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை படிக்கும்போது அதில் சொல்லப்பட்டுள்ள எல்லா மனமாற்ற சம்பவங்களிலும் கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கம் அல்லது சுவிசேஷம் இருந்தது. ஜனங்கள் சுவிசேஷத்தைக் கேட்டு, அதைப் புரிந்திருக்கிறார்கள். அடுத்ததாக, அதை விசுவாசித்து, தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, கடைசியாக அவர்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள்.

மறுபடியும், இவைகளெல்லாவற்றிற்கும் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கும் என்ன சம்மந்தம் இருந்தது? கிறிஸ்துவானவர் மனிதன் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காக மாத்திரம் மரிக்காமல், அந்த இரட்சிப்புக்கு முன்பாக அவர் சில நிபந்தனைகளையும்

வைத்திருக்கிறார். கிறிஸ்து தேவனுடைய குமாரனாயிருப்பதாலும், மனிதன் இரட்சிக்கப்படும் படிக்கு சிலுவையில் மரித்தவராயிருப்பதினாலும், வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரத்தையும் உடையவராக இருப்பதாலும் சில குறிப்பிட்ட காரியங்களை மனிதன் செய்யும்படி கேட்பதற்கு அவருக்கு எல்லா உரிமையும் இருக்கிறது. மனிதன் இரட்சிக்கப்பட விரும்பினால், அவன் விசுவாசிக்க வேண்டும் என்று அவர் சொல்கிறார். அவன், தேவனையும் விசுவாசிக்க வேண்டும், கிறிஸ்துவையும் விசுவாசிக்க வேண்டும். அடுத்து, தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் அல்லது தவறான அல்லது எல்லா கெட்ட நடக்கைகளிலிருந்தும் திருந்த வேண்டும். அடுத்ததாக, அவன் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும். கடைசியாக, பாவங்கள் கழுவப்படும்படி அவன் ஞானஸ்நானம் பெற வேண்டும். இவைகளைச் செய்தால், அவன் இயேசுவின் மீது வைத்திருக்கும் விசுவாசத்தையும், இரட்சிக்கபட வேண்டும் என்கிற தன் விருப்பத்தையும் இயேசுவிடம் நிரூபிப்பதாக இருக்கும். சுவிசேஷத்தில் வல்லமை இருப்பதாக பவுல் சொன்னார். அதாவது, கர்த்தர், மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் இவைகளின் மூலம் கிரியை செய்கிறார். " *கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது. விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது* " (ரோமர் 1:16,17).

ரோமர் ஆறாம் அதிகாரத்தில் பவுல், கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்ததைக் காட்டுகிறார். மேலும், அவர், ஒருவர் கர்த்தருக்கு கீழ்ப்படியும் போது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைத் தன்னுடைய செயல்களின் மூலம் காட்டுகிறார். வேறுவிதமாகச் சொன்னால், ஒருவர் கிறிஸ்துவை விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பாவத்துக்கு மரிக்கும்போது, கிறிஸ்துவின் மரணத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார். அவர் கர்த்தரோடு அடக்கம் பண்ணப்படுவதற்கு தண்ணீர் ஞானஸ்நானத்தில் மூழ்கும்போது கர்த்தருடைய மரணத்தின் தன்மைகளோடு தொடர்பை ஏற்படுத்திக்கொள்கிறார். இது கிறிஸ்துவின் அடக்கத்தை எடுத்துக்காட்டுகிறது. கடைசியாக, ஒருவர் புதிய மனிதனாக தண்ணீரிலிருந்து வெளியே வரும்போது, தன்னுடைய பழைய பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிலையில் வெளியே வருகிறார், இது கர்த்தருடைய உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது. பவுலின் இந்த வார்த்தைகளைக் கவனியுங்கள். "*இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால், அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர்*

உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம் "* (ரோமர் 6:3-6). தொடர்ந்த பவுலடியார் இப்படியாகச் சொல்கிறார், "*முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம், பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள் "* (ரோமர் 6:17,18). இங்கே உபதேசம் என்பது கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலாயிருக்கிறது. இங்கே இந்த ஜனங்கள் எந்த சட்டத்திற்கும் கீழ்ப்படிந்தார்களோ அது உபதேச மாயிருக்கிறது. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, இவர்கள் தங்கள் பாவங் களுக்காக மரித்து, தண்ணீர் ஞானஸ்நானத்தினாலே அடக்கம் பண்ணப்பட்டு, தண்ணீரிலிருந்து வெளியே வந்து, அதாவது, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கும், புதிய சிருஷ்டியாயிருக்கும் படிக்கும், நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையோடு கிறிஸ்துவைப் பின்பற்றும்படிக்கும், அவர்கள் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை தங்கள் செயலின் மூலம் காட்டியிருக் கிறார்கள்.

II தெசலோனிக்கேயர் 1:7-9 வசனங்களில் பவுலடியார் சுவிசேஷத் திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினை யைச் செலுத்தும்படிக்கு கர்த்தர் திரும்ப வருவார் என்று சொல்கிறார். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாத வர்கள் இழந்து போவார்கள் என்று பேதுருவும் சொல்கிறார் (I பேதுரு 4:17). எனவே, சுவிசேஷம் என்பது ஒருவர் விசுவாசிக்கின்ற ஒன்றாக மட்டு மல்லாமல் ஒருவர் கீழ்ப்படிய வேண்டிய ஒன்றாகவும் இருக்கிறது. ஒருவர் அதை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படியும் போது கர்த்தர் அந்த நபரை தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்கிறார்.

சுவிசேஷம் வேத வாக்கியங்களில் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. " *சுவிசேஷத்தை நான் பிரசங்கியாயிருந்தால், எனக்கு ஐயோ* " என்று பவுல் சொன்னார் (I கொரி. 9:16). வேறொரு சுவிசேஷத்தை தான் பிரசங்கித்தால் தான் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் என்றும் அவர் சொல்கிறார் (கலா. 1:6-9). இதையே வேறுவிதமாகச் சொன்னால், ஒன்றான மெய் சுவிசேஷத் தை அவர் ஏற்கனவே பிரசங்கித்துவிட்டார். வேறொரு சுவிசேஷம் இல்லாத படியால், வேறொரு சுவிசேஷத்தை தான் பிரசங்கித்தால் தான் சபிக்கப்பட்ட வனாயிருக்கக்கடவன் என்றும் அவர் சொல்கிறார் (கலாத். 1:6-9). ஏனென்றால், உண்மையான சுவிசேஷம் ஏற்கனவே பிரசங்கிக்கப்பட்டு விட்டது என்று பவுல் சொல்கிறார்.

என் நண்பர்களே, கிறிஸ்துவின் நற்செய்திக்கு நீங்கள் கீழ்ப்படிந்து விட்டார்களா? அதை நீங்கள் விசுவாசிக்கிறீகளா? அதற்குக் கீழ்ப்படிவீர்களா? நீங்கள் அப்படிச் செய்ய நான் ஜெபிக்கிறேன். உங்களை இரட்சிக்க கர்த்தருக்கு உகந்த வேறு வழி இல்லை.

பெண்கள் பகுதி

# " மீதியானவைகளை சேகரியுங்கள் "

சகோ. ரேச்சல் நாயகம்

பிரியமான சகோதரிகளே! ஸ்தோத்திரம். கர்த்தருடைய பெரிதான கிருபையினாலே நாம் வாழ்வதற்கான வீட்டை தேவன் நமக்குக் கொடுத்திருக் கிறார். குடும்பமாக நாம் அதற்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அந்த வீட்டிற்குள்ளாக நாம் பலவிதமான இன்பங்கள், துன்பங்கள், பிரச்ச னைகள், பொறுப்புகள் இப்படி பல அனுபவங்களைப் பெற்றிருக்கிறோம். குறிப்பாக, பெண்களாகிய நமக்கு வீடு ஒரு முக்கிய பங்கானதாகவே இருக் கிறது. இதில் சிக்கனம் என்பதும், தேவன் நம்மை நம்பி, நம் பொறுப்பில் கொடுத்திருக்கும் பொருள்களை ஜாக்கிர தையாகப் பயன்படுத்துவது என்பதும் மிக முக்கியமான ஒன்றாகும். இவை களைக் குறித்து யார் என்ன கருத்தைத் தெரிவித்தாலும் தேவனுடைய வார்த்தை சொல்லுவதை விட முக்கியமானதாக அது இருந்து விட முடியாது. வேதாகமம் புனிதமான கொள்கைகளையும், கடமைகளையும் உள்ளடக்கியது.

தேவன் சிருஷ்டிகராகவும் அனைத்து ஆசீர்வாதங்களையும் கொடுக்கிறவராகவும் இருக்கிறபடியால் அவைகளை வீண் செய்வது தேவனு டைய வேலையை வீணாக்கு வதா கிறது. விசேஷமாக, குடும்பப் பெண்கள் இதில் உள்ள பாடத்தை கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். சிக்கனம் என்பது பிசினித்தனமோ அல்லது பொருளாசையோ அல்ல. சிக்கனம் என்பது வீணாக்காமல் இருப்பது. கஞ்சத்தனம் என்பது பிறருக்குப் பகிர்ந்து கொடுக்காதிருப்பது. சிக்கனம் என்பது உன்னுடையதை பாதுகாப்பது. பொரு ளாசை என்பது பிறருடையதை பெற்றுக் கொள்ள ஆசைப்படுவது.

வேதாகமம் சிக்கனத்தை ஆதரித்தும், கஞ்சத்தனம், பொருளா சையை கண்டித்தும் பேசுகிறது. சில உதாரணங்களை பார்ப்போம்.

பொருள்களை வீண் செய்யக் கூடாது என்பதைக் குறித்து இயேசு போதித்திருக்கிறார். ஐந்து அப்பம், இரண்டு மீன் துண்டுகளைக் கொண்டு ஐந்தாயிரம் பேரை போஷித்த சம்ப வத்தில் (யோவான் 6:5-13). எல்லோரும் சாப்பிட்டு திருப்தியடைந்த பின்பு தம்முடைய சீஷர்களை நோக்கி, " ஒன்றும் சேதமாய் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்து வையுங்கள் " என்று இயேசு அறிவுறுத் துகிறார். உணவுத் துணிக்கைகளின் மேல் இயேசுவுக்கு என்ன அப்படி அக்கறை? அளவிட முடியாத அளவு அதிகமான உணவை உண்டு பண்ண அவரால் முடியும். அப்படியிருக்க மீதி யான உணவையும் உண்டு பண்ண அவரால் முடியும். அப்படியிருக்க மீதியானவைகளைப் பற்றி பொருட் படுத்த வேண்டாம் என்று ஏன் அவர்

சொல்லவில்லை! அவைகள் எங்கிருந்து வந்ததோ அங்கே ஏராளமாய் இருக்கிறது. அங்கே இயேசு தம் சீடர்கள் பொருளாதாரம் பற்றி கற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்பினார். நமக்கும் அது பொருந்தக் கூடியதாக இருக்கிறது. வீணாக்குதல் கூடாது என்பதை இயேசு கற்றுக் கொடுத்தார். பசியினால் தவிக்கும் எண்ணற்ற மக்கள் பூமியில் இருக்கும் போது நாம் பொருள்களை வீணாக்குவது நம் மனச்சாட்சிக்கு விரோதமாக நாம் செய்யும் செயலாகும். வீணாக்கும் ஒன்றை நாமே பயன்படுத்தலாம் அல்லது பிறருக்குக் கொடுத்து உதவலாம். தேவன் இஸ்ரவேல் ஜனங்களை மன்னாவினால் போஷிக்கும் போது (யாத். 16:15-21). அதுதினமும் கிடைக்கும் ஒன்றாக இருந்தது. அவர்க ளுடைய பயன்பாட்டிற்கும் அதிகமாக தேவன் கொடுத்திருந்தால் அது கட்டாயம் வீணாகியிருக்கும்.

மேலும், எறும்பினிடம் சென்று நம்மை பாடம் கற்க சொல்கிறார். " சோம்பேறியே, நீ எறும்பி னிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக்கொள். அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும் கோடை காலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து அறுப்புக் காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்து வைக்கும் " (நீதி. 6:6,8). பாராட்டத்தக்க பல குணங்களோடு, தன் சம்பாத்தி யத்தில், கஷ்ட நேரத்திற்கு உதவும்படியாய் சேமித்து வைக்கிறதே அதுதான் மிகவும் புத்திசாலித்தனமான செயலாகும்.

தம் சம்பாத்தியத்தை விட அதிகமாக செலவு செய்யாதவன் ஒரு போதும் இல்லையே என்று சோர்ந்து போகும் நிலைக்கு தள்ளப்பட்டான். இதை நீதிமொழிகளின் ஆசிரியர் கூறும் போது, " வேண்டிய திரவியமும், எண்ணெயும் ஞானவானுடைய வாசஸ்தலத்தில் உண்டு. மூடனோ அதைச் செலவழித்துப் போடுகிறான் " (நீதி. 21:20) என்கிறார். வருமானத் திற்குள் குடும்பம் நடத்த பழகிக் கொள்வது ஒரு தனிக்கலை. அது, கடன்களுக்குள் சிக்கிக் கொள்ளாதபடி பாதுகாக்கும். வருமானத்திற்குள் வாழ்வதென்பது தேவனுடைய திட்டமாகும். அது பாதுகாப்பையும், சமாதானத்தையும் மேம்படுத்தும்.

அரிமத்தியா ஊர் யோசேப்பு சிக்கனமாக திட்டமிட்டு வாழ்ந்து சேகரித்து வைத்திருந்த ஆசீர்வாதம் இயேசுவுக்கு எதிர்பாராத நேரத்தில் சேவை செய்வதற்கு உதவியது. புதிய கல்லறையை உடனே வாங்க அவன் சிக்கனமாய் சேர்த்து வைத்தது உதவியது. தான தர்மங்கள் அனைத்தும் யாரோ ஒருவர் கஷ்டப்பட்டு வேலை செய்து சிக்கனமாக சேர்த்து வைத்ததின் பலனேயாகும்.

நீதி 31ம் அதிகாரத்தில் பேசப்படும் குணசாலியான ஸ்திரீ, " ஒரு வயலை விசாரித்து அதை வாங்குகிறாள். தன் கைகளின் சம்பாத்தியத்தினால் திராட்சை தோட்டத்தை நாட்டுகிறாள் " (நீதி. 31:16). தான் சம்பாதித்தவைகளை ஆடம்பரமாகக்கூட செலவு செய்திருக்கலாம். ஆனால், சிக்கனமாக வாழ்ந்து தனக்கும், தன் குடும்பத்துக்கும் மாத்திரமல்ல. " சிறுமையானவர்களுக்குத் தன் கையைத் திறந்து, ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள் " (20). என்று வாசிக்கிறோம்.

புதிய ஏற்பாடும் இதே கோட்பாட்டை நமக்குக் கற்றுக் கொடுக்கிறது. " குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத் தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன் "

என்று (எபே. 4:28). வேலை செய்து சம்பாதிப்பதைக் காட்டிலும் ஞானமாக செலவு செய்தல் அவசியம். முட்டாள் பணத்தை சம்பாதிக்கலாம். ஆனால், அதை செலவு செய்ய ஒரு புத்திசாலி தேவை.

ஒரு தாலந்தைப் பெற்றவன் அங்கே கண்டிக்கப்படுகிறான் (மத். 25:14-30). ஏன் என்ன செய்தான். தனக்குக் கிடைத்ததை பயன்படுத் தாமல் விட்டு விட்டான். எனவே, அது வீணாய் போனது.

## II சிக்கனத்திற்கு எது தேவைப்படுகிறது?

கட்டாயம் இது கற்றுக் கொள்ளப் பட வேண்டிய ஒன்று.

**முதிர்ச்சி** : நாம் வளர வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு கூறும் போது " நான் குழந்தையாயிருந்தபோது குழந்தை யைப் போல பேசினேன். குழந்தை யைப் போல சிந்தித்தேன். குழந்தை யைப் போல யோசித்தேன். நான் புருஷ னான போதோ குழந்தைக்கேற்றவை களை ஒழித்து விட்டேன் " (1கொரி. 13:11) என்கிறார். சுய ஒழுக்கம் என்பது முதிர்ச்சியின் ஒரு பகுதி. நாளைய தேவை பற்றிய சிந்தனை வேண்டும். ஒரு குழந்தை இதைச் செய்ய முடியாது. எதெல்லாம் வேண்டுமென்று விரும்பு மோ அதையெல்லாம் வாங்கும். நாளையைப் பற்றி சிந்திக்காது. நம்மு டைய விருப்பங்களுக்கு நாம் அடிமை யாகாமல் நமக்கு விருப்பம் அடிமை யாக வேண்டும்.

**மேலாண்மைத் தன்மை அவசியம்** : தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டு வந்து அதை பண்படுத்தவும், காக்கவும் வைத்தார். இதற்கு மேலாண்மைத் திறமை அவசி யம். ஆண்கள் கடினமாக உழைத்து முன் கதவு வழியாகக் கொண்டு வருவதை பெண்கள் பின் கதவு வழியாக வீண் செய்யக் கூடாது. இது உண்மை. சம்பாத்திப்பதை விட செலவு செய்ய ஞானம் தேவை.

சிக்கனம் குடும்பத்திற்கு அவசியம். ஒருவர் மாத்திரமல்ல கணவன், மனைவி, பிள்ளைகள் என்று யாவரும் இதை உணர்ந்து ஒத்துழைக்க வேண்டும். பிறகு திட்ட மிடுதல் அவசியம். இதற்கும் குடும்பத் தாரின் ஒத்துழைப்பு அவசியம்.

கடைசியாக, சிக்கனம் என்ற பெயரில் தேவனுக்கடுத்த காரியங் களில் கையை குறுக்கிக் கொள்ளக் கூடாது. " அவனவன் தனக்கானவை களையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக " (பிலி. 2:4) ஒரு போதும் இதை மீறி விடக்கூடாது. சிக்கனம் என்ற பெயரில் தேவனை வஞ்சித்து விடக்கூடாது (மல்கியா 3:8,9). திட்டமிட்டு சேமித்து வைத்து, பிறருக்கும், தேவனுக்கும் செலவு செய்ய வேண்டும். இதை மறந்து விடக் கூடாது.

மரியாள் விலையேறப்பெற்ற தைலத்தை இயேசுவின் பாதத்தில் பூசினபோது சீஷர்கள் அதைப் பார்த்து வீணாகப் போகிறதே என்றார்கள்.

இயேசு அவர்களுடைய புரிந்து கொள்ளாத நிலையைப் பார்த்துக் கண்டிக்கிறார். தேவனுக்காகவும், அவருடைய வேலைக்காக அவர் நாமத்தில் செய்யப்படும் எதுவும் ஒரு போதும் வீண் போகவே போகாது. இந்த மாபெரும் உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவுக்குள் அருமை யான சகோதரிகளே " மீதியான வைகளை சேகரியுங்கள் " என்று இரட்சகராகிய இயேசு கிறிஸ்து கற்றுக் கொடுத்த பாடம் இன்றைக்கு நமக்கு மிகவும் பிரயோ ஜனமாயிருக்குமென்று நம்புகிறேன். பிரயோஜனப்படுத்திக் கொள்ள கர்த்தர் உதவி செய்வாராக!

வாலிபர் பகுதி

# ஒத்திவைப்பு என்னும் பாவம்

**Bro. Benny Martin**

பிரியமான வாலிபக் கண்மணிகளே! நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் மீண்டுமாக இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அருமையானவர்களே! நம்முடைய வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் நாம் செய்ய வேண்டிய காரியங்களை நாளை, நாளை என்று ஒத்தி வைக்கிறோம். பிறகு, நாளை என்பது நமக்குக் கிடைக்காமலேயே போய் அந்த காரியங்களை நாம் செய்யாமலேயே நேரத்தைக் களைந்து விடுகிறோம் அல்லது வருடங்கள் உருண்டோடி விடுகின்றன. இப்படியாக, நாம் செய்ய நினைத்த காரியங்களை ஒத்தி வைப்பதினால் பின்பு வாய்ப்பு கிடைக்காமலே போய் நம் வாழ்க்கையில் கை நழுவிப்போன காரியங்கள் பலபல. அன்பானவர்களே! நாளை என்பது நம்முடைய கைகளில் இல்லை. காலங்களை தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தேவனுடைய கைகளில் தான் இருக்கிறது (யாக்கோபு 4:14). எனவே தான், நாம் காலத்தின் அருமை யை உணர்ந்தவர்களாக அதை பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டு மென்று தேவனால் எச்சரிக்கப்படுகிறோம் (எபேசியர் 5:16). சிலரைப் பற்றி நாம் பார்க்கும் போது இவ்வுலகத்திற்குரிய வேலைகளை ஒத்திவைக்காமல் சரியான நேரத்தில் செய்து முடிப்பார்கள். ஆனால், ஆவிக்குரிய காரியங்கள் என்று வரும் போது ஒத்தி வைப்பில் ஈடுபடுவதை நாம் பார்க்கிறோம்.

இப்படிப்பட்டவர்களுக்கு ஆவிக்குரிய சிந்தை என்பது துளிகூட இருக்காது. மாறாக, மாம்ச சிந்தையால் நிரப்பப்பட்டவர்களாய் இருப்பார்கள். ஆனால், ஒத்தி வைப்பில் உள்ள மிகப்பெரிய வித்தியாசம் என்னவென்றால், நாம் உலகத் திற்குரிய காரியங்களை ஒத்தி வைப்பதினால் தற்காலிகமாக நமக்கு இழப்பு ஏற்படும். ஆனால், ஆவிக்குரிய காரியங்களில் நாம் ஒத்திவைப்பில் ஈடுபட்டால் அது நமக்கு நித்திய பாதிப்பை ஏற்படுத்தும், அதற்காக நாம் மிகப் பெரிய விலையை கொடுக்க வேண்டியதாயிருக்கும். வேதாகமத்தில் இதற்கு மிகச் சிறந்த உதாரணம் தேசாதிபதியாக இருந்த பேலிக்ஸ் என்பவன் தான். ஒருநாள் அவன் தன் மனைவியாகிய துருசில்லாளுடனே வந்து, " பவுலை அழைப்பித்து, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்து அவன் சொல்லக்கேட்டான். பவுல் நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்து; இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் " என்றான் (அப். 24:24,25).

வேறுவிதமாகச் சொன்னால் பேலிக்ஸ் மனந்திரும்பி தேவனுடைய காரியங்களில் ஈடுபட வாய்ப்பு வந்த போது அதை ஒத்திவைத்தான், அதற்குப் பின்பு மறுபடியும் அந்த வாய்ப்பு அவனுக்கு வரவே இல்லை. அதன்பிறகு சில காலத்திற்குள்ளையே அவன் சிங்காசனத்தி லிருந்து தள்ளப்பட்டான். இது நமக்கு கர்த்தருடைய காரியங்களில் ஒத்திவைப்பு கூடாது என்பதை படிப்பிக்கிறது. இப்போது நம் ஒத்திவைப்பு, கிறிஸ்தவ வாழ்க்கையில் எப்படிப்பட்ட பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று பார்ப்போம்.

## I ஒத்திவைத்தல் பிசாசின் மாபெரும் ஆயுதமாகும்

தேவன் மோசேயை தம்முடைய ஜனங்களை வழிநடத்தும்படி அழைத்த போது, அவர் பல சாக்குப்போக்குகளைச் சொல்லி தப்பித்துக் கொள்ள முயற்சித்தார். தேவன் அவைகளை ஏற்றுக்கொள்ளாமல் தம் ஜனங்களை வழிநடத்த வைத்தார் என்பதை நாம் அறிந்திருந்தாலும், இதை நாம் அப்படியே சபையில் பொருத்திப் பார்க்க முடியும். சபையில் சுவிசேஷத்தை பிறருக்கு எடுத்துச் செல்ல வேண்டிய அங்கத்தினர்கள் அப்படிச் செய்யாமலிருப்பதற்குச் சொல்லும் சாக்குபோக்குகள் ஒத்திவைக்கும் செயல்களாகத் தான் இருக்கின்றன. சாத்தான் ஒத்திவைத்தலை தன் ஆயுதமாக எடுத்துப் பயன்படுத்தி நம் ஆவிக்குரிய வாழ்வில் பெருத்த சேதத்தை ஏற்படுத்தி விடுகிறான். அவன் சிறியோர் முதல் பெரியோர் வரை அதாவது நம் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் ஒத்திவைத்தலைப் புகுத்தி விடுகிறான்.

உதாரணமாக : 12 வயது சிறுவன் கர்த்தருடைய காரியங்களில் ஈடுபடாமலிருக்க அதை ஒத்திவைக்க " நான் தேவனைப் பற்றி சிந்திக்க மிகவும் சிறியவனாயிருக்கிறேன் " என்பான். 25 வயது வாலிபன் " என் வாழ்க்கை உலகப்பிரகாரமான காரியங்களில் பரபரப்பாக இருக்கிறபடியால் தேவனைப் பற்றி சிந்திக்க எனக்கு நேரமில்லை " என்பான்.

இப்படி எல்லா வயதினரும் தேவனுக்கடுத்த காரியங்களில் ஈடுபடாமலிருக்க அவர்கள் மத்தியில் சாத்தான் ஒத்தி வைத்தலைப் புகுத்தி விடுகிறான். பிரியமானவர்களே! சிலர் இப்பூமிக்குரிய வாழ்க்கை சம்மந்தமான காரியங்கள் என்று வரும்போது அதை ஒத்திவைக்காமல் சரியான நேரத்தில் செய்து முடிப்பார்கள். உதாரணமாக, வேலைக்கு சரியான நேரத்தில் செல்வார்கள், பிள்ளைகளை சரியான நேரத்துக்கு அனுப்புவார்கள், குடும்ப நிகழ்ச்சிகளில் ஒன்றை கூட விட்டுவிடாமல் எல்லாவற்றிலும் பங்கேற்பார்கள். ஆனால், ஆவிக்குரிய காரியங்கள் என்று வரும்போது அதை இப்போதே செய்யாவிட்டால் என்ன? நாளை நாளை என்று ஒத்திவைப்பில் ஈடுபட்டு கடைசிவரை அதைச் செய்து முடிக்காமலேயே காலத்தைக் கழித்து விடுகிறார்கள்.

## II ஒத்திவைத்தலை மேற்கொள்ள ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபடவேண்டும்.

அன்பானவர்களே! தேவனுடைய காரியங்களை நாம் ஒத்திவைத்து பிறகு செய்யலாம் என்று நினைத்து செய்ய முடியாமல் போவதால் இவ்வுலகத்திலும் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. அதைவிட மேலாக வரவிருக்கும் உலகில் நாம் நித்திய ஜீவனை இழந்து போவோம். அது நமக்கு எவ்வளவு பெரிய பாதிப்பு! எவ்வளவு பெரிய இழப்பு!. சரி, இதிலிருந்து நாம் எப்படி விடுபட முடியும்? நிச்சயமாக, வழி உண்டு. நாம் ஆவிக்குரிய சிந்தையுடையவர்களாயிருந்து, ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபட வேண்டும். " மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் " என்று (ரோமர் 8:6)ல் நாம் வாசிக்கிறோம். இப்படி ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபடுவதைத் தான் ஆவிக்குரிய உடற்பயிற்சி என்று சொல்கிறோம். இந்த உடற்பயிற்சியில் ஈடுபட நமக்கு நல்ல ஆவிக்குரிய போஷாக்கு அவசியப்படுகிறது. அனுதினமும் நாம் பல்வேறுப்பட்ட முடிவுகளை எடுக்கிறோம். அப்படி முடிவெடுப்பதில் நம்மை வழிநடத்த தேவனுடைய வார்த்தையாகிய ஆவிக்குரிய போஷாக்கு நமக்கு அவசியமாகிறது. அதேபோல் நாம் அனுதினமும் பலவிதமான சவால்களை, சோதனைகளை எதிர்கொள்கிறோம். அவைகளுக்கு எதிராக எதிர்நீச்சல் போட நாம் பெலனற்றுப் போகும் போது உலகத்தாரிடம் திரும்புகிறோம். அவர்கள் நம்மிடம் இருக்கின்ற கொஞ்ச பெலனும் அற்றுப் போகிற அளவுக்குச் செய்து விடுகிறார்கள். இவ்வுலகத்தின் தத்துவ ஞானங்கள், பொன்மொழிகள் போன்றவைகள் எவ்விதத்திலும் நமக்கு ஆறுதலைத் தரவே தராது. மாசும், கலப்படமும் நிறைந்த இவ்வுலகில் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிற தேவனுடைய வார்த்தை மட்டுமே மாசற்ற, கலப்படமற்ற ஒன்றாக இருக்கிறது. அவைகளை நாம் ஏராளமாக, தாராளமாக உட்கொள்ளும்போது அது கசப்பான நம் வாழ்வை இனிப்பாக்குகிறது. இப்பூமிக்குரிய ஆகாரத்தை நாம் தொடர்ச்சியாக உட்கொண்டு எவ்வித உடற்பயிற்சியும் செய்யாதிருந்தால் அது நம் உடலில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். அதேபோல் நாம் ஆவிக்குரிய போஷக்கை தொடர்ச்சியாக உட்கொண்டு விட்டு நம் வாழ்க்கையில் தேவனுக்குப் பிரியமாக அதை அப்பியாசப்படுத்தவில்லையென்றால், அது நம் ஆவிக்குரிய வாழ்வில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

பிரியமான வாலிபர்களே! நம் வாழ்க்கை கொஞ்சக்காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறபடியால் (யாக்கோபு 4:14) வாழ்கின்ற கொஞ்ச நாட்களில் தேவனுக்குப் பிரியமாக வாழ்ந்து, தேவனுடைய அளவற்ற ஆசீர்வாதங்களைப் பெற்று மகிழ்வோம். நாம் தேவனுடைய காரியங்களை ஒத்திவைத்தால் தேவன் நமக்குத் தருகிற ஆசீர்வாதங்களை ஒத்தி வைத்துவிடுவார். எனவே, ஒத்தி வைத்தல் என்னும் பாவத்தில் விழுந்துவிடாதபடிக்கு நம்மை நாம் காத்துக்கொள்வோம். ❄

சிறுவர் பகுதி

# வாயின் வார்த்தைகள்

**Bro. ABEL R. NAYAGAM**

எனக்குப் பிரியமான சிறு குழந்தைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் வாழ்த்துக்கள். நீங்கள் அனைவரும் சுகமாயிருக்கிறீர்கள் என விசுவாசிக்கிறேன். தொடர்ந்து இந்த மாதமும் இவ்விதழின் மூலம் உங்களைச் சந்திப்பதில் எனக்குப் பெருமகிழ்ச்சி. மாதந்தோறும் வெளிவரம் காரியங்கள் உங்களுக்குப் பிரயோஜனமானதாயிருக்கிறது என நம்புகிறேன்.

சரி, இந்த மாதம் நீதிமொழிகள் 12:18-22 வசனப்பகுதிகளிலிருந்து சில காரியங்களைக் கற்றுக் கொள்வோம். வேதாகமத்தைத் திறந்து விட்டீர்களா? சரி, இங்கே வேதாகமம் நாம் பேசும் வார்த்தைகளைப் பற்றி கூறுகிறது.

பிள்ளைகளே! நீங்கள் பேசுகிற வார்த்தைகள் ஒவ்வொன்றையும் தேவன் கேட்கிறார். பள்ளிக்கூடங்களில், உங்கள் வீடுகளில், நீங்கள் நண்பர்களோடு இருக்கும் பொழுதும் பேசும் வார்த்தைகள் சரியானதாக இருக்க வேண்டும்.

மற்றவர்களைப் புண்படுத்தும்படி பேசக்கூடாது (வச. 18) " பட்டயக் குத்துகள் போல் பேசுகிறவர்களும் உண்டு. ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஔஷதம் ".

பிறரைப் புண்படுத்தும்படி பேசுவது நல்லதல்ல. நீங்கள் பேசும் வார்த்தைகள் பிறரை உற்சாகப்படுத்துவதாக இருக்கு வேண்டும். உங்கள் வார்த்தையினால் பிறர் சந்தோஷப்பட வேண்டும். "ஔஷதம்" என்றால் "குணமாக்கும் தன்மை கொண்டது " என்று அர்த்தம். அப்படியானால், உங்கள் வார்த்தைகள் பிறருக்கு நன்மையானதாக மட்டும் இருக்க வேண்டும். பொய் நாவு கூடாது.

19,22 வசனங்களில் வ.19-ல், சத்திய உதடு என்றும் நிலைத்திருக்கும்; பொய் நாவோ ஒரு நிமிஷம் மாத்திரம் இருக்கும்.

வசனம் 22-ல், பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள், உண்மை யாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்.

பிள்ளைகளே! அடுத்ததாக உங்கள் நாவு பொய்யை பிறப்பிக்கக் கூடாது. பொய் பேசுகிறவர்களைத் தேவன் அருவருட்பாக பார்க்கிறார். மாறாக எந்த நிலைமையிலும் உண்மை பேசுகிறவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். மத் 5:37-ல் உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்

என்று இயேசு கூறியிருக்கிறார். நீங்கள் தேவனுடைய பார்வையிலே பிரியமானவர்களாக இருக்க வேண்டும் என்றால் பொய்யை வெறுத்து, உண்மையை மட்டும் பேச வேண்டும்.

என்ன குழந்தைகளே! புரிந்ததா? உங்கள் வார்த்தையினால் பிறருக்குச் சமாதானமும், உற்சாகமும் கிடைக்க வேண்டும். அதோடு கூட உங்கள் வாயின் வார்த்தைகள் உண்மையானதாக, சத்தியம் பேசுகிறதாக இருக்க வேண்டும். அப்படி இருப்பீர்கள், இருக்கப் பிரயாசப்படுவீர்கள் என நம்புகிறேன்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

## மருத்துவ ஆலோசனை

**சர்க்கரை நோய் உள்ளவர்கள் சரியான நேரத்தில் உணவு உட்கொள்ள வேண்டும். ஏனெனில்?**

1. இரத்தத்தில் சர்க்கரையின் அளவு சீராக எந்நேரமும் இருப்பது அவசியம்.
2. குறைவாகவும், அதிகமாகவும் மாறி மாறி இருந்தால் கண், சிறுநீரகம், நரம்பு மண்டலம் ஆகியவை எளிதில் பாதிக்கப்பட்டு விடும்.

**சர்க்கரை நோய் உள்ளவர்கள் கால்களில் புண் எதுவும் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும். ஏனெனில்?**

1. சர்க்கரை நோயிருப்பதினால் நரம்புகள் பாதிக்கப்பட்டு கால்களில் உணர்வில்லாமல் போகும். எனவே, அடிபட்டாலும் அது சில நாட்களுக்கு வலி இல்லாமல் இருக்கும். சில நாட்களுக்குப் பின் புண்ணாக மாறிவிடும்.
2. சர்க்கரை நோயிருப்பதினால் இரத்தக் குழாய்களில் எளிதில் அடைப்பு ஏற்படும். எனவே, புண் எளிதில் குணமாகாது.

**எப்படிப் பாதுகாப்பது?**

1. தினந்தோறும் கால்களைக் கவனிக்க வேண்டும்.
2. MCR Slippers பயன்படுத்துவது நல்லது
3. கால் வறட்சியாகமல் இருக்க எண்ணெய் / Paraffin Oil தடவிக் கொள்ள வேண்டும்.
4. காலணிகள் இல்லாமல் நடக்கக் கூடாது.
5. இரவில் வெளிச்சம் இல்லாத இடத்தில் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

# விவாகமும், விவாகரத்தும்

திருமணம் என்பது ஒரு நிலையான குடும்பத்தை நிறுவும் பொருட்டு ஒரு ஆணும், ஒரு பெண்ணும் தங்களை இணைத்துக் கொள்ளும் உடன் படிக்கையாகும். ஆதாம் ஏவாளை சிருஷ்டித்ததின் மூலம் தேவனால் திருமணம் ஸ்தாபிதம் பெற்றது. ஆணும், பெண்ணுமான இந்த முதல் தம்பதி தான் திருமணத்திற்கான நியமனம் பெற்றனர் (ஆதி. 1:27). ஆதலால், "ஆணும், பெண்ணும் ஒரே மாம்சமாகும் " சிலாக்கியத்தைப் பெற்று திருமண பந்தத்தில் தெய்வீக ரீதியில் பிணைக்கப்படும் ஒழுங்குமுறை நிறுவப்பட்டது (ஆதி. 2:24).

திருமண பந்தத்தின் பாதுகாப்பு ஒரு முழு சமுதாயத்தின் நலனுக்காக மெய்யாகவே முக்கியத்துவம் வாய்ந்தது. முதலாவதாக குடும்பத்தின் ஒற்றுமையில் தான், ஒரு உறுதித் தன்மையும், குடும்பப் பெயரைத் தரித்துக் கொள்ளும் உரிமையும், சொத்தின் பாதுகாப்பும், அன்பும் அசைக்க வொன்னா நம்பிக்கையும் கொண்ட ஒரு சூழல் உருவாகிறது. இரண்டாவதாக, திருமணம் தான் ஒரு சமுதாயத்தின் ஸ்திரத்தன்மையை நிலைநாட்டுகிறது. " திருமண பந்தமின்றி எந்த சமுதாயமும் நிலைபெறாது. திருமண பந்தமில்லாத ஒரு சமுதாயம் இல்லை என்பது தான் உண்மை ".

தேவனுடைய மூலாதார திட்டத்துடன் திருமணம் ஒத்துப் போகும் போது, அது நிச்சயமான கனத்தைக் கொண்டு வருகிறது. விவாகம் யாவருக் குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக...." (எபி. 13:4). ஒருவர் தாம் விவாகம் செய்ய விருப்பமில்லாத அளவுக்கு சூழ்நிலை உருவாகும் போதே அல்லாமல் (1 கொரி. 7:26; 28, 32, 35, 40). மனுஷன் (அல்லது ஸ்திரீ) தனிமையாயிருப்பது நல்லதல்ல (ஆதி. 2:18) விவாகம் பண்ணாதிருக்க கட்டளையிடுவது திருமறைக்கு முரணானது (1 தீமோத். 4:1-3).

தேவனால் நிர்மாணிக்கப்பட்ட பரிசுத்த விவாகம் பல நிச்சயமான பலன் களைக் கொண்டது. முதலாவதாக, மேலே குறிப்பிட்டபடி இது தனிப்பட்ட முறையில் இருவருக்குள்ளும் மிகுந்த நெருக்கத்தை ஏற்படுத்துகிறது (ஆதி. 2:18) மூன்று நபர் தத்துவம் கொண்ட ஆனால் ஒருமித்த கருத்தையுடைய தெய்வத்தின் சாயலில் மனித வர்க்கம் உண்டாக்கப்பட்டது. இரண்டாவதாக, விவாகம் தான் முறையாக பிள்ளைகளை உலகத்தில் உருவாக்கக் கூடியது (ஆதி. 12:28; 1 தீமோ. 5:14). மூன்றாவதாக, விவாகம் ஒரு ஆணுக்கும். பெண் ணுக்கும் தேவன் கொடுத்த அவர்கள் சரீரத்தில் தோன்றும் பாலுணர்வில் ஒழுக்க ரீதியான திருப்தியைக் கொடுக்கிறது. முறையான விவாகத்தில் தான் " பாலுணர்வில் மஞ்சம் அசுசிபடாது " (எபி. 13:4).

மிடுக்கான ஐக்கியத்திற்கு வழிவகுக்கும் தேவனுடைய தெய்வீகப் பொருத்தம் விவாகத்தில் இணைக்கப்பட்ட இருபேருடைய மரண பரியந்தம் நிலைத்திருக்கக் கூடியது. இருவரில் ஒருவர் மரித்தாலும், இந்த உறவு முறியும் (ரோமர் 7:2; 1 கொரி. 7:39) " மரணத்திற்குப் பிறகு எந்த ஒரு விவாகமும் தொடர்வதில்லை " (மத். 22:3).

விவாகரத்து - தேவனே விவாகத்தின் ஊற்றுக்காரணமாக இருக்கிற படியால், விவாகத்தம்பதி இருவரும் உயிரோடிருக்கும் காலத்தில் எந்த சூழ்நிலையில் விவாக முறிவு ஏற்பட வேண்டும் என தீர்மானிக்கும் அதிகாரம் அவருக்கு மட்டுமே உரியது. எனவே, " விவாகரத்திற்கு தேவனுடைய சித்தம் என்ன? உண்மையில் விவாகரத்தை தேவன் வெறுக்கிறார் " (மல்கியா 2:16). கர்த்தரால் அனுமதிக்கப்பட்ட விவாகரத்தே ஆயினும், இருவரில் ஒருவரா கிலும் திருமண ஒப்பந்தத்தை மீறும்போது தான் அது அமுலாகிறது. எந்த விவாகரத்தும் தவறு செய்யாத தம்பதி இருவருக்கிடையே நிகழக் கூடியதல்ல; ஒருவர் தவறு செய்யாதவராயிருப்பார். மற்றொருவர் தவறு செய்திருப்பார். அப்பொழுது விவாகரத்து ஏற்படுகிறது.

பழைய ஏற்பாட்டின் கீழ், ஒருவனுடைய மனைவியினிடத்தில் அவன் இலச்சையான காரியத்தைக் கண்டு " அவள் மேல் பிரியமற்றவனானால், அவன், தள்ளுதல் சீட்டை எழுதி அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பி விடலாம் " (அதாவது அவளை விவாகரத்து செய்து விடலாம் உபாகமம் 24:1): இருப்பினும் இது பரலோகத்தின் ஆரம்ப குறிக்கோளுக்கு முரண்பட்டதல்ல. இஸ்ரவேல் ஜனங்களின் " கடின இருதயத் தினிமித்தம் " தேவன் மோசேயின் மூலம் அதை சகித்துக் கொண்டார். "ஆதி முதல் அப்படியிருக்கவில்லை என்றார் (மத். 19:8). ஏவப்பட்ட இந்த வசனப் பகுதியின் உட்கருத்து என்னவெனில், தேவனுடைய பூர்வாங்க திருமணத் தைக் குறித்த திட்டம் மோசேயின் மூலம் அதைச் சகித்துக் கொண்டார். " ஆதி முதல் அப்படியிருக்கவில்லை " என்றார் (மத். 19:8). ஏவப்பட்ட இந்த வசனப் பகுதியின் உட்கருத்து என்னவெனில், தேவனுடைய பூர்வாங்க திருமணத் தைக் குறித்த திட்டம் மோசேயின் பிரமாணத்தின் கீழ் அப்படி அனுமதிக்கப் பட்டிருந்தும், ஏதேனில் உருவான நோக்கத்திலிருந்து மாறுபடவே இல்லை. பிறகு இந்த புதிய ஏற்பாட்டு பிரமாணத்தின்படி, இயேசு விவாகத்தின் நோக்கத்தை முறையாக மீட்டமைத்தார். அதற்கொப்பாகத் தான் கர்த்தர், " ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனத்தினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால் அவன் விபச்சாரம் செய்கிறவனாயிருப்பான் " (மத். 19:7). இந்தக் குறிப்பிடத்தக்க வசனத்தில் அநேகக் கருத்துக்களைக் கூறலாம்.

முதலாவதாக, இது ஒரு உலகளாவிய பொதுக் காரியமாக இயேசு பேசுகிறார் என்பது தெளிவு. அதாவது இச்சட்டம் அனைத்து மனித வர்க்கத்தி னாலும் பொதுவானதாக கைக்கொள்ளப்படவேண்டியது. " எவனாகிலும் "

எனும் பதம் ஒவ்வொரு நபரையும் குறிப்பது (மத். 5:22,31,32). ஆதலால், திருமணத்தில் இணையும் மனிதர்கள் ஒவ்வொருவரும், தனது ஒழுக்க ரீதியான காரியத்திற்குட்பட்டவன்.

இரண்டாவதாக, " ஒருவரும் தனது துணையைத் தள்ளி விடக் கூடாது". (விவாகரத்து செய்யக் கூடாது) வேசித்தனத்தினிமித்தமே விவாகரத்து செய்யலாம். வேசித்தனம் என்றால், முறையற்ற அனைத்துவித பாலுணர்வில் உடல் உறவைச் சுட்டிக் காட்டுகிற ஒரு பொதுவான பொருளை யுடையது. கர்த்தர் இப்படியாக விவாகரத்தையும், மறுமணம் செய்தலையும் வேசித்தனம் செய்தல் என்ற அடிப்படையில் " அனுமதிக்கிறார். சாத்தியக் கூறை கண்ணோக்கிப் பார்த்தால் (அனுமதிக்கப்படாத, முறையற்ற பாலுறவில் ஈடுபடாத) குற்றமற்ற நபர், வேசித்தனம் செய்த தனது துணையை விவாகரத்துச் செய்யவும், விரும்பினால் மறுமணம் செய்யவும், உரிமை பெற்றவர். எதிர்மறை கண்ணோக்கில் வேசித்தனத்திற்கு அப்பாற் பட்ட ரீதியில் ஒருவர் விவாகரத்து கொடுத்தால், அவர் மறுமணம் செய்யும் அனுமதியில்லாதவர்.

மத். 19:9ன்படி வேசித்தன முகாந்திரத்தினாலேயன்றி வேறே காரணத்திற்காக விவாகரத்து செய்தால், தானும் வேசித்தனம் செய்வதாகும். திருமறையில், விபச்சாரம் என்பது, தனது முறையான திருமணத் துணை யேயன்றி வேறொரு நபருடன் மனமுவந்து வைத்துக் கொள்ளும் பாலுறவைச் சுட்டிக் காட்டுகிறது. இப்பதத்தின் வினைச் சொல்லின் காலம், கிரேக்க புதிய ஏற்பாட்டில், ஒரு தொடர் செயலைக் குறிப்பிடுவதாகும். இன்னொரு வார்த்தையில் சொன்னால், இப்படிப்பட்ட முறையற்ற உறவை வைத்துக் கொள்ளும் நபர், தான் மணக்கும் புதிய துணையுடன் " தொடர்ந்து விபச்சாரம் செய்வதைக் குறிக்கிறது. முறையற்ற விவாகரத்து செய்தவரை "புதுமணம் " செய்து கொள்ளுகிற நபரும் விபச்சாரத்தில் ஈடுபடுபவராகிறார் அல்லது பேராசிரியர் வில்லியம் பெர்க் தனது மொழிபெயர்ப்பில் குறிப்பிட் டுள்ளபடி, " அந்த நபர் விபச்சாரத்தில் வாழ்கிறார் ". இந்த இணைவு ஏன், "விபச்சாரம் " என்று அழைக்கப்படுகிறது என்பதற்கான காரணம் தெளிவானது, (மனித சட்டத்தின்படி) விவாகரத்து பெற்ற நபர் ஒரு புதிய துணையுடன் இணைக்கப்பட்டாலும், தேவனின் பிரமாணத்தின்படி, அவன் இன்னமும் முந்தின மனைவிக்கே வாழ்க்கைப் பிரமாணத்தின்படி, வாழ்க்கைத் துணையாவார். புதிய இணைவு, தேவனுடைய அங்கீகாரம் பெற்றதல்ல.

மத். 5:35-ல், கிறிஸ்து, ".....வேசித்தன முகாந்திரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன் அவளை விபச்சாரம் செய்யப் பண்ணுகிற வனாயிருப்பான்...." (மத்தேயு 5:32) என்று போதித்தார். காரணமின்றி தள்ளி விடப்பட்ட ஸ்திரீ, தள்ளிவிடப்பட்டதினால் மாத்திரம் விபச்சாரியாவதில்லை. ஆகிலும் அவள் வேறொருவரை மீண்டும் விவாகம் செய்யும் போது விபச்சாரி யாகிறாள்.

விவாகரத்துக்கும் மற்றொரு காரணமாக சிலர் கூறுவதாவது; ஒரு கிறிஸ்தவன், ஒரு அவிசுவாசியை விவாகம் செய்திருந்து, அந்த அவிசுவாசியி னால் கிறிஸ்தவன் கைவிடப்பட்டால், இவர் மறுமணம்செய்ய உரிமை பெற்ற வராகிறார் என்கின்றனர். இதற்கு ஆதாரமாக 1 கொரி. 7:15ஐ சுட்டிக் காட்டி அவிசுவாசி கிறிஸ்தவனைப் பிரிந்து போனால், கிறிஸ்தவன் இனியும் "அடிமைப்பட்டவன் அல்ல " என்று கூறுகின்றனர். இப்படியாக அந்தக் கிறிஸ்தவன் " அடிமைத்தனத்திலிருந்து " விடுதலைப் பெற்று மறுமணம் செய்து கொள்ளலாம் என்று தங்களுக்குள்ளே திருப்திபட்டுக் கொள்கின்றனர். இங்கு கூறப்படும் "அடிமைப்பட்டவர் " என்னும் பதம், நேரடிப் பொருளில் "கொத்தடிமைத்தனம் " என்று அர்த்தம் கொடுக்கிறது. தீத்து 2:3-ல் " அடிமைத் தனம் " என்று பொருள்படும், இதே கிரேக்கப்பதம் தான் பயன்படுத்தப் பட்டுள்ளது. ஆனால், விவாக பந்தம் என்பது ஒருபோதும் அடிமைத்தனத்திற் குட்படுத்துவதில்லை! அவிசுவாசியான ஒரு வாழ்க்கைத்துணை விசுவாசி யான கிறிஸ்தவனைப் பார்த்து, " கிறிஸ்துவை விட்டு வெளியே வா இல்லை யென்றால் பிரிந்து போகிறேன் " என்று கூறும்போது, கிறிஸ்தவ விவசுவாசி அந்த அவிசுவாசியை பிரிந்து போகும்படி விட்டுவிடலாம். முரட்டாட்டமுள்ள அந்த அவிசுவாசியின் எண்ணங்களுக்கு கிறிஸ்தவன் கட்டுப்பட்டவரல்ல (அடிமைப்பட்டவரல்ல) ஆகிலும் அந்தக் கிறிஸ்தவன் மறுமணம் செய்து கொள்ளலாம் என்று வசனத்தில் கூறப்படவில்லை. பவுல் சொல்லிய இந்த வசனப்பகுதியில் அவர் வாயில் வராத கூற்றை உட்படுத்துவது வீணானது.

புதிய ஏற்பாடு விவாகம், மற்றும் விவாகரத்து குறித்து மிகவும் கண்டிப் புடன் போதிக்கிறது. விசேஷமாக இன்றைய சமுதாயத்தின் ஒழுக்க சம்பந்தமான காரியங்கள் தளர்த்தப்பட்டுள்ள சூழ்நிலையுடன் ஒத்துப் போகிற நிலையை அது கண்டித்துப் போதிக்கிறது. தங்களைத் தாங்களே இருதயத்தை பிழிந்தெடுக்கும் ஒழுக்கமற்ற காரியங்களில் அறியாமையினால் அநேகர் தங்களை உட்படுத்திக் கொள்கின்றனர் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆகிலும் இந்த இன்றியமையாத உண்மை கைக்கொள்ளப்படுவது அவசியம். பலவீனமும், பாவமும் நிறைந்த மனிதர்கள் மீது பரிதாபப்பட்டு உதவ நினைக்கும் அதே வேளையில், சீர்குழையும் சமுதாயத்திற்கென பரிசுத்த வசனத்தின் தராதரத்தை நாம் குறைத்து விட முடியாது. மாறாக, தேவனால் ஏவப்பட்ட சத்தியத்தின் அதிகாரத்தை உயர்த்தும் வகையில் சிறப்பான ஜனங் களை உருவாக்கும் சவாலை நாம் மேற்கொள்ள வேண்டும். கிறிஸ்தவத் திற்குப் பெரிதான தியாகங்கள் தேவை; அது அநேகருடைய உயிர் விடுதலைக் கூட கண்டது. எனவே, இதற்கான கிரயம் எதுவாயினும், சத்தியத்தை, முழு சத்தியத்தையும் தேடுவதற்குத் தேவையான தைரியத்தைப் பெற்றுக் கொள்வோமாக. சத்தியத்தையேயன்றி வேறெதையும் தேடாமலிருப் போமாக. சர்வ வல்லமையுள்ள தேவன் தாமே நியமித்த குடும்பத்தின் நல்லொழுக்கத்தைக் காக்கவும் உயர்த்தவும், கிறிஸ்துவின் சபையார் தங்களது சகக் கிறிஸ்தவர்களை வலியுறுத்துகிறார்கள். ❄

# இயேசுவும் சிலுவையும்

Bro. Willard Collins

உலகம் முழுவதுமுள்ள இழந்து போனவர்களின் இரட்சிப்பு இயேசுவையும், அவருடைய சிலுவையையும் மையமாகக் கொண்டுள்ளது. அவருடைய தியாகம், மனிதனை கடந்த 1900 ஆண்டுகளுக்கும் மேலாக தேவன் பக்கமாக இழுத்து வந்துள்ளது. சிலுவையிலறையப்படுவதற்கு முன், கிறிஸ்து அவமான முறையில் நடத்தப்பட்டார். உலக ரட்சகர் இயேசு தன்னுடைய விரோதிகளால் சவுக்கால் அடிக்கப்பட்டு, போர்ச் சேவகரால் துன்புறுத்தப்பட்டு பரிகசிக்கப்பட்டார். எதிரிகள் அவர் மீது உமிழ்ந்து அதன் பிறகு சிலுவையில் அறைய அவர் கொண்டு போகப்பட்டார். சிலுவை மரணத்தை மத்தேயு இவ்விதமாகக் குறிப்பிட்டுள்ளார். " அவரை சிலுவையில் அறைந்த பின்பு அவர்கள் சீட்டு போட்டு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள்...." அவர்கள் உட்கார்ந்து அவரை காவல் காத்துக் கொண்டிருந்தார்கள் (மத். 27:35,36). சில மணி நேர பாடுகளுக்குப் பிறகு இயேசு கொல்கதாவில் தன் உயிரை விட்டார்.

## I சிலுவை – ஒரு அடையாளம் :

கிறிஸ்துவின் பேருண்மைகளை சிலுவை அடையாளப்படுத்துகிறது. முதலாவது இந்த அடையாளம் பாவத்தின் ஆழத்தை சுட்டிக்காட்டுகிறது. பாவத்தின் விளைவை சிதைந்து போன குடும்பங்களிலும் பயங்கர பகையுணர்விலும் ஒருவருடைய உரிமையை மற்றவர் பரித்துக் கொள்கிற கொடூரச் செயல்களிலும் நாம் காணலாம். ஆனால், இயேசுவின் சிலுவை மரணம் பாவத்தை அதன் உண்மைத் தன்மையோடு மனிதனுக்குக் காட்டும் தேவனின் மாபெரும் முயற்சியாகும். தேவ குமாரனின் மரணத்திற்கு பாவம் தான் பொறுப்பாகும். ஒருசமயம் நான் மறைந்த " லியோ போல்ஸ் " என்பவர் " இயேசுவை சிலுவையிலறைந்த பாவம் " என்ற தலைப்பில் பிரசங்கிப்பதைக் கேட்டேன். அவர் அறியாமையான பாவம் என்பதிலிருந்து தொடங்கி, விரோதம், பொறாமை, திருட்டு, பொய், பண ஆசை, ஒழுக்கக்கேடு ஆகிய பல பாவங்கள் பற்றி பேசினார். அந்தப் பிரசங்கத்தில் போல்ஸ் அவர்கள் நீதி தவறுதலை குறித்துப் பேசும்போது, " பிலாத்தைக் குறிப்பிட்டார். தான் என்ன செய்ய வேண்டுமென்பது தெரிந்தும் அதை செய்ய முடியாத அளவு பெலவீனமாயிருந்தான் " அவன் உறுதியாகச் செயல்பட்டிருக்கலாம். ஆனால், தனக்கு கனத்தைக் கொடுக்கும் கொள்கைகளைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு ஒழுக்க ரீதியில் ஒரு கோழையாக நடந்து கொண்டான்.

## II இரக்கத்தின் அகலம் :

தேவனுடைய அளவு கடந்த இரக்கத்திற்கு கிறிஸ்துவின் சிலுவை ஒரு அடையாளம். இயேசு கிறிஸ்து சிந்தின இரத்தத்தின் வல்லமை

எல்லோருக்கும் கிடைக்கிறது. தீமை தண்டிக்கப்பட வேண்டும்மென நீதி நீடிக்கிறது. ஆனால், கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக தேவன் மனிதனுக்கு இரக்கத்தை நீட்டிக் கொடுத்துள்ளார். ஒரு பாவி தன்னுடைய பாவத்திற்கு தண்டனையைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக, அவன் பாவ மன்னிப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

கீழே சொல்லப்படும் சம்பவம், மேதியர், பெர்சியராலே கொடுக்கப் பட்டது. மேதியர் பெர்சியர் இவர்களின் சட்டங்கள் மாற்றத்தக்கதல்ல. மாத்திர மல்ல அவைகளின் கண்ணுக்குக் கண்ணும் பல்லுக்குப் பல்லும் கேட்கப் படும். ஒருசமயம் ஒரு இளைஞன் தன்னைச் சேர்ந்த ஒருவனின் கண்களைக் கெடுத்துப் போட்டான். அவனுடைய குற்றத்திற்குத் தண்டனையாக, அந்த இளைஞனின் கண்கள் பிடுங்கப்பட வேண்டுமென சட்டம் சொல்லிற்று.

அந்த இளம் குற்றவாளி, விசாரணைக்காக நீதிபதியின் முன்னால் கொண்டு வரப்பட்டான். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவனின் சொந்தத் தகப்பன் நீதிபதியாக இருக்க நேர்ந்துவிட்டது. அங்கே, நீதி மற்றும் இரக்கம் இவ்விரண்டின் முரண்பாடான அழுகையின் சத்தம் நீதிபதியின் செவிகளில் ஒழித்தது. நீதிபதி மகனை நேசித்தான். கூடவே நாட்டின் சட்டத்தையும் மதித்தான் தவறு செய்தவன் கண்டிப்பாகத் தண்டிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் அன்பையும தனது இரக்கத்தையும் காட்ட வேண்டும் நீண்ட சிந்தனைக்குப் பிறகு நீதிபதி தன் மகனைப் பார்த்து இவ்விதம் சொன்னான். உன்னுடைய நீதிபதி என்ற முறையில், நீ அழித்த இரண்டு கண்களுக்கு பதிலாக உனது இரண்டு கண்கள் கொடுக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தின் தண்டனையை நான் விதித்தாக வேண்டும். சட்டம் சொல்வதற்குக் குறைவாக நான் விதிக்க முடியாது. " ஆனால், உனது தகப்பன் என்ற முறையில் நீதியை நிறைவேற்றுவதற்கு உதவும் பொருட்டு என்னுடைய கண்களில் ஒன்றைத் தருகிறேன் " என்று. இந்த வகையான இரக்கத்தின் பாடத்தைக் குறித்து பவுல் சொல்லியுள்ளார். " நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்த தினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். சிலுவை மனிதனுக்கான தேவ அன்பையும், இரக்கத்தையும் வெளிப்படுத்து கிறது.

## III இரட்சிப்பின் வல்லமை :

மனிதனுடைய இரட்சிப்பின் வல்லமையை சிலுவை அடையாளப் படுத்தகிறது. " சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயி ருக்கிறது ". (1கொரி. 1:18) கிறிஸ்துவின் சிலுவையின் மூலமாக மனிதன் தேவனிடம் ஒப்புரவாகிறான்.

விவாகரத்தைப் பெற்றுக் கொண்ட ஒரு கணவனும் மனைவியும் மரிக்கும் தருவாயிலிருந்த தங்களது குழந்தையின் படுக்கையில் இருபுறமும் நின்றிருந்ததாக ஒரு உண்மைச் சம்பவம் உண்டு. அந்த குழந்தை ஒரு

கையினால் தனது தந்தையின் கரத்தைப் பற்றியிருந்தது. இன்னொரு கரத்தால், தாயின் கைகளைக் கெட்டியாகப் பிடித்திருந்த இந்நிலையில் அந்தக் குழந்தையின் உயிர் பிரிந்தது. ஆவி தன்னை தந்த தேவனிடத்திற்குத் திரும்பியது. பரஸ்பர அன்பில் ஒன்றாக்கப்பட்ட பிஞ்சுக் கரங்களால் கிட்டிச் சேர்க்கப்பட்ட கணவனும் மனைவியும் ஒன்று சேர்க்கப்பட்டார்களென்றும், ஒரு முறிந்து போன குடும்பம் ஒன்றானது என்றும் அது சொல்கிறது.

கொல்கதாவில் தேவகுமாரன், தனது ஒரு கரத்தை பரலோகத்திற்குள்ளாக நீட்டி தேவனை பிடித்துக் கொண்டார். மற்றொரு கரத்தை உலகத்திற்கு நேராக நீட்டி மனிதனின் இருதயத்தை தொட்டுள்ளார். அதன் மூலம், சிலுவையில் தொங்கின கிறிஸ்து, மனிதன் தேவனோடு ஒப்புரவாக வேண்டுமெனக் கேட்கிறார். நமது இரட்சகர் மரித்த சிலுவை மரம் சாதாரணமானது என்று எண்ண வேண்டாம். சிலுவை ஒரு மகத்தான பாடத்தைக் கற்பிக்கிறது. யோவான் அப்போஸ்தலன் தனது நூலில் சிலுவையின் மேன்மையை ஒரு வசனத்தில் திரட்டி கொடுத்துள்ளார். " தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோவான் 3:16).

## நாளும், நடப்பும்

1. நிதி அமைச்சர் 2014-15 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.
2. சென்னை மருத்துவக் கல்லூரியில் தேசிய முதியோர் நல மருத்துவ மையம் - மத்திய அரசு.
3. சட்டவிரோதமான கட்டிடங்கள் கட்டப்படுவதைத் தடுக்க புதிய விதிமுறைகள் வகுக்கப்படும் - மத்திய அமைச்சர்.
4. தென்மேற்குப் பருவமழை பொய்த்துப் போனதால் பல மாநிலங்களில் வறட்சி.
5. டிசம்பருக்குள் பணவீக்கம் குறையும் - பொருளாதார ஆய்வறிக்கை
6. ஹமாஸ் தீவிரவாதிகளைக் குறிவைத்து காசாவில் இஸ்ரேல் விமானங்கள் குண்டு வீச்சு.
7. உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் சாம்பியன் பட்டத்தை ஜெர்மனி நான்காவது முறையாக தட்டிச் சென்றது.

# பாடம் – 42 கிறிஸ்துவின் சபையானது மீன் வலைக்கு ஒப்பாயிருக்கிறது

Bro. K. பாஸ்கர்

கிறிஸ்துவின் சபையானது மீன் வலைக்கு ஒப்பாயிருக்கிறது என்று ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறி இருக்கின்றார். மீன் வலைக்குள் நல்ல மீன்களும், கெட்ட மீன்களும் இருக்கின்றதே அதுபோல கிறிஸ்துவின் சபைக்குள் நல்லவர்களும், கெட்டவர்களும் இருக்கின்றார்கள். அநேகர் நினைப்பது போல கிறிஸ்துவின் சபைக்குள் நல்லவர்கள் மட்டும் இருப்பார்கள் என்று நினைப்பது தவறாக உள்ளது. இதை கிறிஸ்து உவமையின் மூலமாக விளக்குகின்றார். அதை இம்மாத கட்டுரையில் படித்துப் பார்த்து வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை புரிந்து கொள்வோமாக!.

## I கிறிஸ்துவின் சபையானது நல்லவர்களையும், கெட்டவர்களையும் கொண்டிருக்கிறது.

கிறிஸ்துவின் சபையை குறித்து அநேகர் நினைப்பது போல அது நல்லவர் களை மட்டும் தான் அங்கத்தினர்களாகக் கொண்டிருக்கிறது என்ற கருத்து தவறானது என்பதை கிறிஸ்து உவமையின் மூலமாக விளக்குகின்றார். அன்றியும் பரலோக ராஜ்யமானது சகல வித மீன்களையும் சேர்த்து வாரிக் கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது என்கிறார். (மத். 13:47) இங்கு பரலோக ராஜ்யம் என்பது சபையைக் குறிக்கிறது. சகலவித மீன்கள் என்பது சகல ஜனங்களைக் குறிக்கிறது. வலை என்பது கிறிஸ்துவின் சபையைக் குறிக்கிறது. சபைக்குள் ஞானஸ்நானம் பெற்று பரிசுத்தமாகவும், தொடர்ந்து ஆராதனைக்கு வருவதையும் குறிக்கிறது. அதே சமயத்தில் சபைக்குள் ஞானஸ்நானம் பெற்றும் ஆராதனைக்கு வராமல் உலக வாழ்க்கையில் ஈடுபட்டு வாழ்கிற அசுத்தவான்களையும் குறிக் கின்றது. அவர்களாலே சபையின் பரிசுத்தத் தன்மை கெட்டுப் போய் விடுகிறது. இதனால் கிறிஸ்துவின் சபையே மோசமானது என்று நினைக்கக்கூடாது. சபையில் நல்லவர்களும் இருப்பார்கள், கெட்டவர்களும் இருப்பார்கள் என்று ஆண்டவர் சொன்னதை நினைக்க வேண்டும். உதாரணமாக கொரிந்து பட்டணத்தில் உள்ள கிறிஸ்துவின் சபைக்குள் பரிசுத்தவான்களும் இருந்தார்கள். அதே சமயத்தில் அசுத்தவான்களும் இருந்தார்கள் என்று வேதாகமம் கூறுகின்றது (1 கொரி. 5:1-3).

## II கிறிஸ்துவின் சபையானது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் இடமாக இருக்கின்றது.

கிறிஸ்துவின் சபையானது நல்லவர்களும் அதாவது பரிசுத்த வான்களும், அசுத்தவான்களும் ஆராதனைக்கு வந்தால் போதும் என்று நினைப்பதற்கு

இடமில்லை. அது நல்ல மீன்களையும், கெட்ட மீன்களையும் பிரிப்பது போல (மத். 13:48) பரிசுத்தவான் களையும், அசுத்தவான்களையும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து பிரிப்பது போல இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதும் போது தவறு செய்தவர்களை ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு எழுது கிறார் (1 கொரி. 5:1,2).

இன்று இதைப் பின்பற்றும் போது அநேக கிறிஸ்துவின் சபை ஊழியர்கள் ஆதரவு கொடுப்பது இல்லை. எல்லாரும் தவறுக்கு உடைந்தையாக ஒத்துழைப்பு கொடுக்கின்றனர். இதனால் ஒழுங்கு நடவடிக்கைக்கு யாரும் மதிப்பு கொடுப்பது இல்லை. இதன் காரணமாக சபையின் ஒற்றுமை பாதிக்கப்படுகின்றது முதல் நூற்றாண்டு கிறிஸ்துவின் சபையில் ஒற்றுமை இருந்தது. கொரிந்து சபையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட அதை எல்லா கிறிஸ்துவின் சபைகளும் ஏற்றுக்கொண்டன (ரோமர் 16:18; 2 தெச. 3:6) நாமும் உபதேசத்தில் ஒற்றுமை யாயிருப்பது போல ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் விசயத்திலும் ஒற்றுமையுடன் செயல்படுவோம். ஏனென்றால், சபையானது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் இடமாக உள்ளது.

### III மீன் வலையின் முடிவு

கிறிஸ்துவின் சபையானது மீன் வலைக்கு ஒப்பாயிருக்கிறது என்று நமதாண்டவர் கூறியிருக்கின்றார். இந்த உவமையின் முடிவு குறித்து ஆண்டவர் கூறும் பொழுது இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும் அது எப்படி என்றால் சபையில் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து பரிசுத்தத்தை நிலை நாட்டியதற்காக இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும் என்றார். அதாவது, தேவ தூதர்கள் புறப்பட்டு நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டா யிருக்கும் என்றார் (மத். 13:49,50).

சபையில் தொடர்ந்து பரிசுத்தமாக நிலைத்திருந்தால், மரண பரியந்தம் வரை உண்மையாயிருந்தால் ஜீவ கிரீடம் (வெளி. 2:10), இல்லை என்றால் அக்கினி சூளை என்பதை நினைத்துக் கொண்டு செயல்பட வேண்டும். ❄

## தேவனுடைய வார்த்தைகளின் மேன்மை

நம் போர் ஆயுதம் பட்டயமோ அல்லது துப்பாக்கியோ அல்ல. ஆனால், தேவனுடைய சர்வாயுதவர்க்கமாயிருக்கிறது [எபே. 6:13-18]. போர்க்களம் தூரத்தில் இல்லலை. நம் மனதுக் குள்ளும், இருதயத்திற்குள்ளும் இருக்கிறது. நாம் மேற்கொள்ள வேண்டிய மிகப்பெரிய சத்துருக்கள் நம் பயமும், சந்தேகமும் தான். இப்போரில் நாம் வெற்றி பெறுவதற்கான வழிமுறை களை தேவனுடைய வார்த்தை நமக்கு கற்றுத் தருகிறது. தேவனு டைய வார்த்தையை நாம் தியானிப்போமா?

# தேவன் ஏன் பாடுகளை அனுமதிக்கிறார்?

*Kevin L. Moore*

**தே**வனால் செய்யமுடியாத சில காரியங்கள் உண்டு. அவரால் பொய் சொல்ல முடியாது (தீத்து. 1:3). அவரால் அநீதியாய் இருக்க முடியாது (உபாகமம் 32:4). நியாயமாக முடியாத யாதொன்றையும் அவரால் செய்ய முடியாது. இவ்வுலகில் நன்மையின் உச்சநிலையைக் கொண்டுவர தேவன் சில குறிப்பிட்ட காரியங்களை உண்டாக்க வேண்டியதாயிருந்தது. அப்போது தீமை தவிர்க்க முடியாத ஒன்றாக வந்துவிட்டது. மனித இனம் சிந்திக்கவும், தெரிந்து கொள்ளும் திறனுடனும் வடிவமைக்கப்பட்டது. நாம் இவை களெல்லாம் பெரும்பாலும் லேசாக எடுத்துக்கொண்டாலும் ஓர் அடிமையை யோ அல்லது சிறைக்கைதியையோ கேட்டால் சுதந்திரம் என்பது ஒரு மனிதன் பெற்றுக்கொள்ளும் விலையேறப்பெற்ற வஸ்துக்களில் ஒன்று என்பதைச் சொல்வார்கள். தேவன் அன்பாகவே இருக்கிறபடியால் (1 யோ. 4:8). நம் விருப்பங்களுக்கு எதிராக நாம் செயல்பட அவர் நம்மை வற்புறுத்து வதில்லை, மாறாக நம் விருப்பப்படி நடக்க சுதந்திரத்தைத் தருகிறார். சுதந்திரம் தெரிந்து கொள்ளுதலை உள்ளடக்கியது மட்டுமல்லாமல், தவறான முடிவுகளை எடுக்கும் சுதந்திரத்தையும் கொடுக்கிறது. மனிதனை தெரிந் தெடுக்கும் திறன் உடையவனாகப் படைத்துவிட்டு, அவனுடைய தவறான முடிவெடுக்கும் திறனை பறித்துக் கொள்வதென்பது தேவனால் கூடாத காரியம்.

நம்மை சரியான பாதையில் வழிநடத்த தேவன் வழிமுறைப் புத்தகத்தைக் கொடுத்திருக்கிறார் (2 தீமோத். 3:16,17). ஆனால், ஜனங்கள் தேவனுடைய வழிநடத்துதலை அவமதித்து, தவறான முடிவுகளை எடுக்கும் போது அதன் விளைவுகள் வேதனையும், பாடுகளுமாயிருக்கிறது. அடிமைத்தனம், சவுக்கடி, துப்பாக்கி, வெடிகுண்டு, மரண முகாம், மதுபானம், ஆபாசப்படம் போன்றவைகளை உருவாக்கியது யார் தேவனல்ல மனிதன் தான். சுதந்திரமாகிய ஆசீர்வாதம் தவறாகவப் பயன்படுத்தப்படும் போது அதுவே பெரும்பாலான மனித துயரங்களுக்குக் காரணமாகி விடுகிறது.

பலர், ஒன்று மகிழ்ச்சியைத் தருமானால் அதை நல்லதென்றும், வலி அல்லது வேதனையைத் தருகின்ற ஒன்றைக் கெட்டதென்றும் கருதுகிறார்கள். ஆனால், இது ஆழமற்ற குறுகலான பார்வையாகும். இவ்வுலகத்தின் பாடுகள் ஒருவர் வளரவும், முதிர்ச்சியில் மேம்படவும் பயன்படுகிறது. பாடுகள் இல்லை யென்றால் ஒருவர் பொறுப்புள்ளவராக மாறுவார் என்பது முடியாத காரியம். "அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையை யும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து

உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம் " (ரோமர் 5:3,4). தம்மால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் பாடுகள் மாத்திரம் படவேண்டுமென்பது தேவனுடைய விருப்பமல்ல. மாறாக பாடுகளினால் ஏற்படக்கூடிய நேர்மறையான, நன்மையான விளைவுகள் வந்து சேர வேண்டும் என்பது தான் தேவனுடைய விருப்பமாயிருக்கிறது.


வலி, இழப்பு மற்றும் துன்பம் போன்றவைகள் மனித பெலவீனத்தையும், ஒருவருடைய வாழ்க்கையில் தேவனுடைய அவசியத்தையும் உணரச் செய்கிறது. பெருமையும், அகங்காரமும் தனக்குத்தானே அழிவை ஏற்படுத்தும் குணங்களாகும் (நீதி. 16:18). ஆனால், பாடுகள் நம் வாழ்க்கையில் அவைகள் எவ்வளவு அவசியம் என்பதை உணரச் செய்கிறது. ஒருவர் தன் கை, கால்களை நீட்டித் தரையில் படுத்துக்கிடக்கும்போது மேல் நோக்கி மட்டுமே அவரால் பார்க்க முடியும். " என் மாம்சமும் என் இருதயமும் மாண்டு போகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார் " (சங். 73:26).


இவ்வுலகில், நம் சரீரப்பிரகாரமான வாழ்க்கை குறுகிய கால அளவை உடையதும், நித்தியத்திற்காக நம்மை ஆயத்தமாக்கிக் கொள்வதற்கு அவசியமாகும். நாம் எதிர்கொள்ளும் சோதனைகள் நம் மெத்தனப் போக்கை தவிர்த்து " மரணமும், துக்கமும், அலறுதலும், வருத்தமுமில்லாத " இடத்தை எதிர் நோக்க வைக்கின்றன (வெளி. 21:4). ஒரு பூரணமான உலகத்தை விட தம்முடைய சிருஷ்டியோடு அன்பான உறவை வைத்துக்கொள்ள தேவன் விரும்புகிறார். நம்முடைய பாடுகள், வலி, துன்பம் மற்றும் இழப்புகளிலிருந்து கூட தேவனால் தம்முடைய நல்நோக்கத்தை நிறைவேற்ற முடியும் நிறைவேற்றுவார் (ரோமர் 8:28,29).


## நீதிமொழிகளில் புத்திமான்

1. தன் உதடுகளை அடக்குகிறவன் புத்திமான். (10:19; 17:28)
2. நீடிய சாந்தமுள்ளவன் மகா புத்திமான். (14:29)
3. புத்திமானுடைய மனம் அறிவை சம்பாதிக்கும். (15:14)
4. புத்திமானுக்கு ஞானம் உண்டு. (10:23)
5. புத்திமான் தன் நடக்கையைச் செம்மைப்படுத்துகிறான். (15:21)
6. புத்திமானைக் கடிந்து கொள், அவன் அறிவுள்ளவனாவான். (19:25)
7. புத்திமானுடைய உதடுகளில் விளங்குவது ஞானம். (10:13)


12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்.

















**World Evangelism Gospel Media**

## Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV

Every Monday 7:00-7:15 am and
Every Thursday 9:30-10:00 am
Every Saturday 7:15-7:30 am

Contact : 98427 30382

## Arjunan in Tamil on Tamilan TV & Radio:

TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile: 9443558041)

## Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV:

TV:Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 a.m **on Rakshana TV:** (ANDRAPRADESH Contact Phone: 08842363722)

## P.R.Swamy & Douglas in Tamil on Radio:

Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNADAKA Contact Mobile: 09844 70763)

## P.K.Varghese in Malayalam on Hindi TV:

TV:Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. (KERALA Contact Mobile: 9447035465)



## Philemon & Kingsley in Tamil on Tamilan TV:


TV:Every Tuesday 9.30-9.45 p.m and Every Sunday 6.45-7.00 a.m. (TAMILNADU Contact Mobile: 9244214421)


## Sunny, Francis & Vinay David in Hindi on Hindi TV:


TV:Every Tuesday 7.00-7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile: 09810896789)


Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014**


## எங்களது இதர வெளியீடுகள்












சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள்**
**மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.